பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 16 சனிக்கிழமை 31.07.2021 கதிர் 268

### இது ரகசியம் அல்ல!

கொவிட் தொற்றுப் பேரிடர் உலகுக்கும், நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் தொல்லை என்றால் சிலருக்கு அது வசதியாகவும் போய் விட்டது.

வங்கிக் கடன், கிரெடிக் கார்ட் தவணைப் பணங்களைச் செலுத்த முடியாமல்

பக்கம்02 »

# தமிழ் அரசியல் கைதிகள் நால்வர் நீதிமன்றத்தால் நேற்று விடுதலை

## வழக்கு விசாரணைகளில் நிரபராதிகள் எனத் தீர்ப்பு

(ந.லோகதயாளன்)

பல ஆண்டுகளாகச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் நான்கு பேர் தமது வழக்கு விசாரணைகளின் அடிப்படையில் நிரபராதிகள் என இனங்காணப்பட்டமையையடுத்து நேற்று வவுனியா மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

☞2

## யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியில் மாணவர்கள் 25 பேருக்கு கொரோனா

### இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றவர்களே பாதிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்போதனாவைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் 25 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தாதியர்

☞2

## சகல அரச ஊழியர்களும் திங்கள் முதல் கடமைக்கு

கொரோனா வைரஸ் தொற்று நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் வரையறுக்கப்பட்ட ஊழியர்களை கடமைக்கு அழைப்பதற்கும் வீட்டிலிருந்து கடமையாற்றுவதற்கும் அனுமதியளித்து வழங்கப்பட்ட அனைத்து சுற்றறிக்கைகளையும் இரத்துச்செய்து அனைத்து ஊழியர்களையும் எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை கடமைக்கு அழைக்க நடவடிக்கை

☞2

## 56 பேர் சாவு!

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 56 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம்

☞2

## யாழில் நேற்று கொரோனோ சாவு!

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யாழ்., சந்திரமாதா கோயிலடியைச்

☞2

## எகிறும் நாளாந்தத் தொற்றாளர்கள் நேற்று 2,455 பேருக்குக் கொரோனா

நாட்டில் நேற்று 2 ஆயிரத்து 455 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 6 ஆயிரத்து 657 ஆக எகிறியுள்ளது.

☞2

## வடக்கு பொலிஸ் தலைமையகத்தில் 9 பேருக்குத் கொரோனாத் தொற்று!

யாழ்., காங்கேசன்துறையில் உள்ள வடக்கு மாகாண பொலிஸ் தலைமை அலுவலகத்தில் 9 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு, தொற்றுக்குள்ளான

☞2






## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவ்வப்போது அல்லாடும் நண்பர் ஒருவரை நகரில் சந்தித்தேன்.

கொஞ்சம் ஆறுதல் என்றார். எப்படி என்று வினவினேன்.

கொவிட் தொற்று நெருக்கடி காரண மாகத் தவணைப் பணம் கட்டுவதற்கு ஓகஸ்ட் இறுதிவரை சகாயம் வழங்கியிருக்கின்றது அரசு. அதனால் மூச்சு விட முடிகின்றது என்றார் அவர்.

சில அரசியல்வாதிகளுக்கும் கொவிட் தொற்று ஆபத்பாந்தவன் மாதிரி வந்து கைகொடுத்திருக்கின்றது. அப்படி உதவியைப் பெற்றிருப்பவர் விமல் வீரவன்ஸ என்கின்றார் தென்னிலங்கை ஊடகவியலாளரான எனது நண்பர் ஒருவர்.

கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்ட மூலத்துக்கு எதிராகத் தென்னிலங்கையில் பெரும் எதிர்ப்பு அலைகள் உருவாகியுள்ளன. அதற்கு எதிராகத் தொழிற்சங்கங்கள் மற்றும் இடதுசாரி அமைப்புகள் போர்கோலம் பூண்டிருக்கின்றன. சிவப்புச் சட்டை அணிந்த இடதுசாரிகள் போல வேடமிடும் விமல் வீரவன்ஸ போன்றோருக்கு இதனால் இக்கட்டு.

இந்தச் சட்டமூலம் சபைக்கு வந்தால் எதிர்த்து வாக்களிப்பேன் என்று புஸ்வாண அறிக்கை வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தினார் விமல் வீரவன்ஸ.

இப்போது – இவ்வாரத்தில் – சட்டமூலம் சபைக்கு வருகின்றது. இந்தச் சட்டமூலத்தை அரசுத் தரப்பு எம்.பிக்கள் கட்டாயம் ஆதரித்து வாக்களிக்க வேண்டும் என மொட்டுக் கட்சிக் கூட்டணி தனது நாடாளுமன்றக் கொறடா மூலம் அறிவுறுத்தல் விடுக்கும் சாத்தியம் உள்ளது.

அப்படி விடுத்தால், விமல் வீரவன்ஸ இந்த சட்ட மூலத்தை எதிர்த்து வாக்களிக்க முடியாது. எதிர்த்து வாக்களித்தால் அரசுத் தரப்பிலிருந்து ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாகும் ஆபத்து அவருக்கு உள்ளது. அமைச்சரவைப் பதவியையும் கூட இழக்க நேரிடலாம்.

இந்தச் சமயத்தில்தான் கொரோனாத் தொற்றை ஒட்டி முன்னேற்பாடாக அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என்று செய்தி வெளியாகியிருக்கின்றது.

தனிமைப்படுத்தலில் இருப்பதால் நாடாளுமன்றுக்கு வரமுடியாது என்று காரணம் காட்டி, மேற்படி கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலம் வாக்கெடுப்புக்கு விடப்படும் சமயம் நாடாளுமன்றில் பிரசன்னமாகாமல் அவர் தவிர்க்கலாம். கொரோனாத் தனிமைப்படுத்தல் அவருக்கு ஒரு சிக்கலுக்குத் தீர்வு தந்து விட்டது என்றார் என் நண்பர்.

ஆனால் எனக்கிருந்த சந்தேகத்தை அவருக்குக் கூறினேன். வாக்கெடுப்பு சமயம் நாடாளுமன்றத்தில் இருப்பதைத் தவிர்ப்பதற்காக வருவித்துக் கொண்டதாக இந்தக் கொரோனா தனிமைப்படுத்தல் இருக்காதா என்று நான் கேட்டேன்.

இருக்கலாம், இருக்கலாம் என்றார் என் நண்பர். நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

* * *

ஓர் அரசியல் சர்ச்சையை முற்றுப் பெறவிடாமல் இழுத்தடிக்க வேண்டும் என்றால் அதற்கு என்ன வழி?

மாறி மாறி விசாரணைக் கொமிஷன் அல்லது விடயத்தை ஆராய்ந்து பரிந்துரைக்க நிபுணர் குழு என்று நியமிக்க வேண்டியதுதான். காலம் தன்பாட்டில் இழுபட்டுப் போய்விடும்.

புதிய அரசமைப்பை உருவாக்குதற்கான நகல் திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு என நிபுணர்குழு ஒன்றை கோட்டாபய ராஜபக்ஷ நியமித்தார் என்பது தெரிந்ததே.

அரசமைப்பு உருவாகத்தில், தேர்தல் சீர்திருத்தமும் ஓர் அம்சம்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக அந்த நிபுணர்கள் குழு அரசியல் கட்சிகள் மற்றும் தரப்புகள், பொது மக்களிடமிருந்து யோசனைகள் திட்டங்களைக் கோரியிருந்தது. டசின் கணக்கான கட்சிகள் எழுத்திலும் பின்னர் நேரில் பிரசன்னமாகியும் தமது யோசனைத் திட்டங்களை முன்வைத்தன.

இப்போது அந்த நிபுணர் குழு மலையைக் கெல்லி எலியைப் பிடிக்குமாற் போல குவிந்து கிடக்கும் அந்த யோசனைத் திட்டங்கள் மத்தியில் இருந்து ஒரு நகல் யாப்பு வடிவத்தை உருவாக்குவதற்கான கொள்கைத் திட்டத்தை தயாரிப்பதில் மும்முரமாக உள்ளது.

தேர்தல் சீர்திருத்தம் குறித்தும் அது விரிவாக ஆராய்கின்றது. அந்தக்குழு சமர்ப்பிக்கப்போகும் நகல் யாப்புக்கான வடிவத்தில் புதிய தேர்தல் முறையும் பரிந்துரையாக இருக்கும்.

இதற்கிடையில் தேர்தல் சீர்திருத்தம் குறித்து ஆராய்வதற்காக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் தனியான ஒரு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவையும் அரசு நியமித்தது. அந்தத் தெரிவுக்குழுவும் கட்சிகள், தரப்புகள், பொதுமக்களுக்களிடமிருந்து புதிய தேர்தல் முறைமைகளுக்கான ஆலோசனைகள், யோசனைகளைக் கோரியது.

அதற்கான காலக்கெடு கடந்த 15ஆம் திகதி முடிவுற்ற போது மொத்தம் 155 யோசனைத் திட்டங்கள் பொதுமக்கள் தரப்பிடமிருந்து தெரிவுக்குழுவுக்குக் கிடைத்திருந்தன.

அவற்றை ஆராய்ந்து உரிய பரிந்துரையை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வழங்குவதற்கு, அந்தத் தெரிவுக்குழுவும் ஒரு நிபுணர் குழுவை நியமித்திருக்கின்றதாம்.

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சுதானந்த லயனகே அக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். கலாநிதி அனுர கருணாதிலக, சுரேன் பெர்னாண்டோ, பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, கௌதம் பாலச்சந்திரன் ஆகியோர் அக்குழுவின் ஏனைய அங்கத்தவர்கள்.

மாறி, மாறி புதிய புதிய குழுக்கள் திடீர் திடீரென முளைக்கின்றனவே தவிர, விடயம் முன்நகர்வதாக இல்லை.

பார்ப்போம் என்ன நடக்கின்றது என்பதை.

– மின்னல் –

## எகிறும் நாளாந்தக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,716 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 75 ஆயிரத்து 212 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## வடக்கு பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்களைக் கண்டறிந்து அவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

## 56 பேர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இவ்வாறு மரணித்த 56 பேரில் 38 ஆண்களும், 18 பெண்களும் அடங்குகின்றனர்.

இதன்படி நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 380 ஆக அதிகரித்துள்ளது.

## யாழ்.தாதியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பயிற்சிக் கல்லூரியில் இலங்கையின் பல மாவட்டங்களையும் சேர்ந்த மாணவர்கள் பயிற்சி பெறும் நிலையிலேயே 25 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அனைத்து நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் அனைவரும் ஏற்கனவே இரண்டு கட்டத் தடுப்பூசிகளையும் ஏற்றிய பின்பும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# இலங்கைக்கு எதிராக கடுமையான பிரேரணை ஜெனிவாவில் சமர்ப்பிக்க ஐந்து நாடுகள் தயார்

ஜெனிவாவில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 48 ஆவது அமர்வில் இலங்கைக்கு எதிராக மற்றுமொரு கடுமையான பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கும் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கு பிரிட்டன் உட்பட ஐந்து நாடுகள் தயாராகி வருகின்றன என்று தகவல் வெளியாகியுள்ளது.

பிரிட்டன், மசிடோனியா, கனடா, ஜேர்மனி மற்றும் மொண்டிநீக்ரோ ஆகியவை இணைந்து கூட்டாக இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கான முன்னெடுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 48ஆவது அமர்வு எதிர்வரும் செப்டெம்பர் 13ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 8 ஆம் திகதி வரை ஜெனிவாவில் இடம்பெறவுள்ளது. இதன்போதே இந்தப் புதிய பிரேரணையைக் கொண்டுவருவதற்கு ஐந்து நாடுகள் திட்டமிட்டுள்ளன என தெரிய வருகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சீனா சமர்ப்பித்த பிரிட்டிஷ் எதிர்ப்பு தீர்மானத்துக்கு ஆதரவாக இலங்கை ஒப்பமிட்டமையே இந்தப் புதிய பிரேரணையைக் கொண்டுவருவதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## தமிழ் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

இந்த விடயம் தொடர்பாக குரலற்றவர்களின் குரல் அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல்கைதிகளான யாழ்ப்பாணத்தை சேர்ந்த நடேசன் தருமராசா, வவுனியாவைச் சேர்ந்த ஜோசப் செபஸ்ரியான், கிளிநொச்சியைச் சேர்ந்த நடராசா சர்வேஸ்வரன் மற்றும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த க.கண்ணதாசன் ஆகியோரே நேற்று விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களில் நடேசன் தருமராசா தனது ஒருவருட புனர்வாழ்வை முடித்து இயல்புவாழ்க்கையில் ஈடுபட்டிருந்த சமயம் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 2013 ஆம் ஆண்டு சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டார். அவருடன் ஜோசப் செபஸ்ரியான் என்பவரும் கைதுசெய்யப்பட்டு இருவருக்கும் கடந்த 2018ஆம் ஆண்டு வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அந்தவகையில் வழக்கு விசாரணைகளின் அடிப்படையில் அவர்கள் வவுனியா மேல் நீதிமன்றத்தால் நிரபராதிகள் என இனங்காணப்பட்டதையடுத்து எட்டு வருடங்களின் பின்னர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 2016ஆம் ஆண்டு நடராசா சர்வேஸ்வரன் கைதுசெய்யப்பட்டார். இவருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் கடந்த 2018ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு விசாரணைகளின் அடிப்படையில் நேற்று நிரபராதி என இனங்காணப்பட்டு நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு கட்டாய ஆள்சேர்ப்பில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைதான யாழ். பல்கலைக்கழக முன்னாள் நுண்கலைத்துறை விரிவுரையாளர் க.கண்ணதாசன் வவுனியா மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

புனர்வாழ்வின் பின்னர் யாழ். பல்கலைக் கழகத்தில் இசைத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றி வந்த கண்ணதாசன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காக, பலவந்தமாக ஆள்களைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கில் அவர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு 2017ஆம் ஆண்டு அவருக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தால் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தண்டனையை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டது. அந்த மேன்முறையீட்டு மனு மீது இரண்டு ஆண்டுகளாக விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் 2020 ஜூலை 22ஆம் திகதி அவரது ஆயுள் தண்டனையை இரத்துச் செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், குற்றப்பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுக்க அனுமதியளித்திருந்தது.

இந்தநிலையில், அவருக்கு எதிராக குற்றப்பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுப்பதற்கு வவுனியா மேல் நீதிமன்றத்திடம் மீளவும் ஒப்படைக்கப்பட்டது. இந்த வழக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்டது.

வழக்குத் தொடுநர் தரப்பு விண்ணப்பத்தை நிராகரித்த வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன், எதிரியை விடுவித்து விடுதலை செய்து கட்டளையிட்டார் – என்றுள்ளது.

## யாழில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த 67 வயதுடைய ஆண் ஒருவரே நேற்று உயிரிழந்துள்ளார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 127ஆக உயர்வடைந்துள்ளது.

## சகல அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எடுக்கவேண்டும்.

– இவ்வாறு ஜனாதிபதியின் செயலாளர், பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கொரோனாத் தடுப்பூசி போட வேண்டிய மக்கள்தொகையில் பெரும் சதவீதத்துக்கு இப்போது இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

பெரும்பான்மையான அரச ஊழியர்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. எனவே, பொது சேவை தொடர்ச்சியாக இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி ஊடக பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கொரோனா சுகாதார பராமரிப்பு வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு 2021 ஆகஸ்ட் 2ஆம் திகதி திங்கட்கிழமை முதல் வழக்கம் போல் அனைத்து அரச ஊழியர்களையும் பணிக்கு அழைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர, பொதுச் சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ரத்னசிறிக்கு அறிவித்தல் வழங்கியுள்ளார்.

கொரோனா நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் வரையறுக்கப்பட்ட ஊழியர்களைக் கடமைக்கு அழைப்பதற்கும் வீட்டிலிருந்து கடமையாற்றுவதற்கும் அனுமதியளித்து வழங்கப்பட்ட அனைத்து சுற்றறிக்கைகளையும் இரத்துச் செய்யுமாறும் ஜனாதிபதியின் செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

தேவை

தகரப் பந்தல் விலைக்குத் தேவை.

தொடர்புக்கு -
076 7403814

காலைக்கதிர் Kalaikkathir



# தீர்வு இனியும் கிடைக்காவிடின் உயிரை மாய்த்துக்கொள்வோம்

## காணாமற்போன உறவுகள் திடசங்கற்பம்

யாழ்ப்பாணத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், கவனவீர்ப்புப் போராட்டமொன்றைநேற்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுத்திருந்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்க தலைவி திருமதி சிவபாதம் இளங்கோதை தலைமையில், யாழ்ப்பாண அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யுத்தம் நிறைவடைந்து 12 வருடங்கள் கடந்துள்ள போதிலும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை என்பதைச் முன்னிறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மேலும் சர்வதேசத்தின் ஆதரவுடன் இடம்பெற்ற யுத்தத்தில்தான் தமது பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டனர் என்றும் ஆகவே, சர்வதேசம்தான் இதற்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் காணாமல்போன தமது பிள்ளைகளை தம்மிடம் ஒப்படைக்க உரிய நடவடிக்கையை சர்வதேசம் முன்னெடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் முன்வைத்தனர். அத்துடன் இதற்குப் பின்னரும் தங்களுக்கு உரிய தீர்வை வழங்காவிட்டால், கடலினுள் மூழ்கி உயிரை விடுவோம் என ஆர்ப்பாட்டக்காரர்கள் எச்சரித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாகச் கடந்த சில காலங்களாக ஒவ்வொரு 30ஆம் திகதியும் மேற்கொள்கின்ற போராட்டத்தை முன்னெடுக்க முடியவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.



# கட்டுப்பாடுகளை மீறும் வகையில் நாடு முழுவதும் திருமண நிகழ்வு

## இராணுவத் தளபதி வேதனை

தற்போது அமுலில் இருக்கும் கட்டுப்பாடுகளை மீறும் வகையில் நாடு முழுவதும் திருமண நிகழ்வுகள் இடம்பெறு கின்றன என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறான திருமண நிகழ்வுகளில் 150 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொள்கின்றமையுடன், பிறகட்டுப்பாடுகளையும் மீறி வருகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது மிகவும் ஆபத்தான சூழ்நிலை என்றும், அண்மைய காலங்களில் திருமணக் கொத்தணிகள் பதிவாகியுள்ளமையால், திருமண நிகழ்வுகள் சுகாதார வழிகாட்டுதலின் அடிப்படையில் நடைமுறை வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சில திருமணங்கள், குறிப்பாக கொழும்புக்கு வெளியே, 150 நபர்கள் என்ற வரம்பை மீறி நடத்தப்படுகின்றன எனத் தகவல்கள் வந்துள்ளன என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்ட வழிகாட்டுதல்களில், விழா மண்டபத்தின் திறனில் 25 வீதம் அல்லது அதிகபட்சம் 125 நபர்களின் பங்கேற்புடன் திருமணங்களை நடத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் சில பகுதிகள் தொடர்ந்து சிவப்பு வலயங்கள்!

## வைத்தியர் நாகலிங்கம் மயூரன்

மட்டக்களப்பு, கோறளைப்பற்று மத்தி, ஏறாவூர், காத்தான்குடி ஆகிய பகுதிகள் தொடர்ந்து சிவப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன என மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

மட்டக்களப்பில் இதுவரை 2 லட்சத்து 78 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் 2 லட்சத்து 6 ஆயிரம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.

இதேவேளை நேற்று காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மட்டக்களப்பில் 58 பேர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி மட்டக்களப்பில் இதுவரை 8 ஆயிரத்து 525 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். O என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொரியாவில் வேலைவாய்ப்புகள் வழங்குவதாக கூறி பணமோசடி

## இருவர் கைது

கொரியாவில் வேலை வாய்ப்பு வழங்குவதாகக் கூறி பணமோசடியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி பகுதியை சேர்ந்த இருவரிடம் இவ்வாறு வேலை வாய்ப்பு வழங்குவதாகக் கூறி 31லட்சம் ரூபா பெற்றுக்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் வதிவிடமாக பெரதெனிய, ஜாஎல, நீர்கொழும்பு மற்றும் முருதலாவ போன்ற பல்வேறு பகுதிகளை கூறியுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

55 மற்றும் 26 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தியதை அடுத்து அவர்களை 7 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# உலகில் நீரில் மூழ்கி இறப்பவர்களின் பட்டியலில் 23 ஆவது இடத்தில் இலங்கை

உலகில், நீரில் மூழ்கி இறப்பவர்களில் இலங்கை 23 ஆவது இடத்தில் இடம் பெற்றிருப்பதாக இலங்கை உயிர்காக் கும் சங்கத்தின் பிரதித் தலைவர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எச். சூலசூரிய தெரிவித்தார்.

உலக நீரில் மூழ்கும் தடுப்பு தினத்தை முன்னிட்டு அரசாங்கச் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் – இலங்கையில் வருடந்தோரும் சுமார் 10 ஆயிரம் பேர் நீரில் மூழ்கி இறக்கின்றனர். அத்துடன் நாள் ஒன்றுக்குக் குறைந்தபட்சம் இருவராவது உயிரிழக்கின்றனர். அவர்களில் 98 வீதமானோர் அலட்சியமாக நீரில் மூழ்கி விடுகின்றனர்.

இவ்வாறு உயிரிழப்பவர்களின் அதிகமானோர் 20 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர்கள். நாட்டில் இவ்வாறான விலைமதிப்பற்ற மனித உயிர்களின் அகால மரணத்தால், அவர்களின் விலைமதிப்பற்ற உயிர்கள் இழக்கப்படுகின்றமையுடன் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் முக்கிய விடயங்களையும் கொண்டுள்ளவர்களையும் நாடு இழக்க நேரிடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# ஊழல் குற்றச்சாட்டுகளிலிருந்து சரண குணவர்தன விடுதலை

ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தன விடுதலை செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான வழக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவரை அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிக்குமாறு உத்தரவிடப்பட்டது. முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தனவுக்குஎதிராக 8 ஊழல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# பண்டாரகமவில் 40 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன் ஒருவர் கைதாகினார்

40 கிலோ ஹெரோயின் போதைப் பொருளுடன் நபர் ஒருவர் பண்டாரகம பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

குறித்த போதைப் பொருளின் பெறுமதி 40 கோடி ரூபா எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மோட்டார் வாகனக் கொள்வனவுக்கு போலி ஆவணம் சமர்ப்பித்தவர் கைது

மோட்டார் வாகனம் ஒன்றைக் அதிபருமான கொள்வனவு செய்வதற்காக போலி ஆவணங்களைச் சமர்பித்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

திகன பகுதியில் உள்ள தனியார் மற்றும் அரச வங்கி கணக்குகளில் 28 லட்சம் ரூபா பணம் இருப்பதாக வங்கி முகாமையாளரின் கையொப்பத்துடன் கூடிய வகையில் குறித்த ஆவணம் தயாரிக்கப்பட்டிருந்ததாகப் பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

24 லட்சம் ரூபா பெறுமதியான வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக மேற்படி நபர் இவ்வாறு போலி ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பத்தரமுல்ல பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## போராட்ட முஸ்தீபுகள்

நாட்டின் எந்தப் பக்கம் திரும்பினாலும் போராட்ட அலை. இது நல்லதற்கல்ல என்பது தெரிந்த விடயம்தான்.

தாம் ஆட்சிக்கு வந்த புதிதில் – கொரோனாத் தொற்றுப் பரவல் பேரிடர் ஏற்பட முன்னர் – தமது ஜனாதிபதி செயலகம், பாதுகாப்பு அமைச்சு, ஜனாதிபதி மாளிகை ஆகியவற்றை அண்டி, காலி முகத்திடலுக்குப் பக்கத்தில் மக்கள் ஒன்று கூடிப் போராட்டங்களை அஹிம்சை முறையில் – அமைதி மார்க்கத்தில் – அறநெறி வழியில் – நடத்துவதற்கு என்றே ஓரிடத்தை ஒதுக்கி அறிவித்தார் நாட்டில் தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ.

உண்மையில், மக்கள் தமது ஆட்சேபனைகளை – ஜனநாயக ரீதியான எதிர்ப்புணர்வை – வெளிப்படுத்துவதற்கு விசால மனத்துடன் இடமளித்து, அந்தப் பண்பியல்பை அங்கீகரித்து ஆட்சித் தலைவர் செய்த ஏற்பாடா இது, அல்லது ஒரு நையாண்டித்தனமான அறிவிப்பா என்ற மயக்கம் மக்கள் மத்தியில் இருந்தது.

போராட்டமா? இதோ இடம் ஒதுக்கியிருக்கின்றேன், வந்திருந்து உங்கள் திருவிழாவை நடத்தி விட்டுச் செல்லுங்கள், நான் ஒன்றும் பொருள்படுத்தப்போவதில்லை என்று ஜனாதிபதி கிண்டல் போக்கில் அப்படிச் செய்தாரா என்ற சந்தேகம் பலருக்கு இருந்தது.

ஆனாலும், அப்படி ஒதுக்கப்பட்ட இடத்தில் போராட்டம் நடத்திய மக்களை சில சமயங்களில் தேடி வந்து சந்தித்து, அவர்களின் கோரிக்கைகள், எதிர்பார்ப்புகளை செவிமடுத்து, மக்கள் போராட்டங்களை மதிக்கிறேன் என்று ஒரு சாயம் பூச ஜனாதிபதி கோட்டாபய தவறவில்லை.

ஆனாலும், அவரதும் அவரது அரசினதும் நல்ல காலமோ அல்லது மக்களின் கெட்டகாலமோ கொவிட் தொற்றுப் பரம்பல் வந்து மக்களின் போராட்ட உணர்வுகளுக்கு சட்ட ரீதியாகவும் நியாய ரீதியாகவும் தடை போட்டு விட்டது.

கணிசமான எண்ணிக்கையானோர் கொவிட் தொற்றுத் தடுப்பூசி போட்டு வருகையில், நாட்டை வழமைக்குக் கொண்டு வர வேண்டிய இக்கட்டில் இருக்கும் ஆட்சித் தரப்பு அதனால் கொவிட் தடுப்பு கட்டுப்பாட்டு விதிகளைத் தளர்த்த வேண்டி நேர்ந்துள்ளது.

இது வரை காலமும் அடக்கப்பட்டிருந்த போராட்டங்கள் இந்தத் தளர்வைப் பயன்படுத்தி ஆங்காங்கே மீளவும் தலைநீட்டத் தொடங்கி விட்டன.

மக்களின் போராட்ட உணர்வை கொவிட் தொற்றுப் பரம்பலைக் காட்டி அடக்க முயல்வதோ, அல்லது போராட்டத்தில் ஈடுபடும் மக்களை – தொழிற்சங்கப் பிரதிநிதிகளை – கட்டுப்படுத்தி, கைது செய்து, தனிமைப்படுத்தி, தண்டிக்க முயல்வதோ எதிர்வினையான விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதை, இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோஸப் ஸ்டாலினையும் ஏனைய பிரதிநிதிகளையும் முதல் தடவை கைது செய்து கையைச் சுட்டுக் கொண்டபோதே ஆட்சித் தரப்பு பட்டறிந்த விட்டது.

அதேசமயம், கொவிட் தொற்றுத் தொடர்பான விழிப்புணர்வு பெற்றுள்ள மக்கள் இத்தகைய போராட்டங்களை நடத்த முற்படும் போது சமூக இடைவெளியைப் பேணி, சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நடப்பதால் அந்த விதிகளைக் காட்டி அத்தகைய போராட்டங்களைத் தடுக்க முடியாத இக்கட்டில் சிக்கி நிற்கின்றது அதிகாரத் தரப்பு.

கொவிட் தொற்றுத் தடுப்பு விதிகள், கட்டுப்பாடுகள் தொடர்ந்து இருக்கின்றமையால் மக்கள் பேரெழுச்சி, பெரும் எண்ணிக்கையில் வெளிப்படாமல் இருக்கின்றதே தவிர, மக்கள் அத்தகைய மனநிலைதான் உள்ளனர்.

அரசு கொவிட் தொற்றுப் பரவலைக் காட்டி மக்கள் ஒன்று கூடுவதைத் தடுத்துக்கொண்டு மக்களின் உணர்வுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை கண்மூடித்தனமாக முன்னெடுக்கின்றது.

உயர் கல்வியை இராணுவ மயப்படுத்துதல் மற்றும் வர்த்தக மயப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தைக் கொண்டு வருகின்றது அரசு.

இதற்கெதிராக கல்வித் துறையுடன் தொடர்புடைய தொழிற் சங்கங்கள் எல்லாம் கொதித்தெழுந்துள்ளன.

வைரஸ் தொற்றுப் பரவல் பேரிடர் ஆபத்து சூழ்ந்துள்ள இந்தச் சமயத்தில்தான் வைத்தியத்துறையுடன் தொடர்புடைய மருத்துவர்கள், தாதியர்கள், ஆய்வு கூட உதவியாளர்கள் என பல தரப்பினரும் மாறி மாறி தொழிற்சங்க நடவடிக்கை என்ற முஸ்தீபுகளில் இறங்கியுள்ளனர்.

ஆசிரியர் போராட்டம், கல்விக்கான பெற்றோரின் போராட்டம், விலைவாசி உயர்வுக்கு எதிரான அன்றாட காய்ச்சி போராட்டம் என்று இப்போது தேசிய ரீதியில் போராட்ட அலை எழுச்சி பெற்றிருக்கின்றது.

வழமைபோல அடக்குமுறை அரசு என்ன செய்யப் போகின்றது? தன் கைவரிசையைக் காட்டும். விளைவைப் பார்ப்போம்.

# அரசிலிருந்து விலகுபவர்கள் தாராளமாக வெளியேறலாம்

## இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் ஒரு சில பங்காளிக் கட்சிகள் கூட்டணியில் இருந்து வெளியேறுவதற்கான வாய்ப்பு உண்டு.

ராஜபக்ஷ அரசாங்கத்தில் எவரும் இணைந்துக் கொள்ளலாம், விருப்பமில்லாவிடின் தாராளமாக வெளியேறலாம்.

பங்காளி கட்சிகள் வெளியேறுவதால் எவ்வித பாதிப்பும் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துக்கு ஏற்படாது என இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

பல்வேறு கொள்கைகளையுடைய அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியை அமைத்துள்ளோம்.

இந்தக் கூட்டணியில் பொதுஜன பெரமுன பிரதான கட்சியாக உள்ளது. கூட்டணிக்குள் கருத்து வேறுபாடுகள் பல காணப்படுகின்றன.

அரசாங்கத்தில் இருந்து வெளியேறவுள்ளதாக சுதந்திர கட்சியின் ஒரு சில உறுப்பினர்கள் குறிப்பிட்டுக்கொள்கிறார்கள்.

அமைச்சு பதவிகளையும், இராஜாங்க அமைச்சு பதவிகளையும், அரச வரப்பிரசாதங்களை பெற்றுக் கொண்டுள்ளவர்கள் அரசாங்கத்தில் இருக்க விருப்பமில்லையென்றால் வெளியேறுவோம் என்று கூறிக் கொண்டிருக்காமல் அரசாங்கத்தில் இருந்து தாராளமாக வெளியேறலாம். - என்றார்.

# தியாகி அறக்கொடை உதவி நிகழ்வுகள் இன்று யாழ்ப்பாணம், பருத்தித்துறையில்

யாழ்ப்பாணம், ஜுலை 31

தியாகி அறக்கொடை நிலைய தலைவர் வாமதேவ தியாகேந்திரனின் நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி மெதடிஸ்ட் மின் வித்தியாலயத்தின் நுழைவாயில் திறப்பு விழா இன்று காலை 8.30 மணிக்கு வித்தியாலய அதிபர் யோ. ஜெகஆனந்தம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக தியாகி அறக்கொடை நிலையத் தலைவரும் பாடசாலையின் பழைய மாணவருமான வா.தியாகேந்திரன் கலந்து சிறப்பிப்பார். யாழ் மாநகர முதல்வர் வி. மணிவண்ணன், இ.போ.ச. முன்னாள் கணக்காளர் தியாகராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

★ ★ ★

தியாகி அறக்கட்டளை நிலைய ஸ்தாபகர் வா.தியாகேந்திரனின் நிதிப் பங்களிப்பில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட புதிய பௌதீக சிகிச்சைப் பிரிவு கட்டடத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் வே. கமலநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தியாகி அறக்கட்டளை நிதியம் ஸ்தாபகர் வா.தியாகேந்திரனின் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் மோகன் குமார் கௌரவ விருந்தினராகவும் பங்குபற்றுவர்.

# கொழும்புத் துறைமுகத்துக்கு அருகிலுள்ள 13 ஏக்கரை சீனாவுக்கு விற்கவுள்ளது அரசு

## மயந்த திஸாநாயக்க எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுலை 31

நாட்டைக் கட்டியெழுப்புவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வழங்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகள் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான அரசியல் பழிவாங்கல்களாக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக நாட்டின் தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யமாட்டோம் என்றுகூறி ஆட்சிப்பீடமேறிய அரசாங்கம், தற்போது துறைமுகத்துக்கு அண்மையிலுள்ள 13 ஏக்கர் நிலப்பரப்பை சீனாவிற்கு விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதேவேளை பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் மீளச்செலுத்த வேண்டிய கடன்களுக்கான நிதியைத் திரட்டிக் கொள்வதற்குமான அரசாங்கத்தின் செயற்திட்டங்கள் தொடர்பில் அடுத்தவாரம் நிதியமைச்சர் நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக்காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# திகட சக்ர வலையொளித்தளத்தின் 50 ஆவது கிணத்தடி நிகழ்வு இன்று

திகடசக்ரவின் 50 ஆவது பிரம்மாண்ட கிணத்தடி இன்று சனிக்கிழமைமாலை 6.30 மணிக்கு Thigada Chakra எனும் Facebook மற்றும் youtube தளங்களின் ஊடாக நிகழ்நிலையில் இடம்பெறவுள்ளது. தமிழ் மக்களின் அடையாள சொத்தாக விளங்கும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தை மையமாக வைத்து 'யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தன் சமூக பொறுப்பை பெரிதும் நிறைவேற்றி வருகிறது / இல்லை' என்ற தலைப்பில் இந்த விவாதம் இடம்பெறவுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

இந்த நிகழ்வின் நடுவராக கலாநிதி 'சொல்லின் செல்வர்' ஆறு திருமுருகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சமூக சேவையாளர் மரியம்பிள்ளை செல்வின், முதுநிலை பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி, யாழ்.பல்கலை விரிவுரையாளர் கோசலை மதன், யாழ் பல்கலை விரிவுரையாளர் இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா, சிரேஷ்ட பொறியியலாளரும் சமூக செயற்பாட்டாளருமான திருநாவுக்கரசு தயந்தன், பிரபல மருத்துவர் நடராஜா பிரபு போன்றோர் பங்குபற்றவுள்ளனர். யாழ்ப்பாண பல்கலையை மையமாக கொண்டு திகட சக்ர நடாத்தும் 50 ஆவது பிரம்மாண்ட விவாதம் இதுவாகும்.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

ந.வித்தியாதரன்

அங்கம் 30

தமிழரசு மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் மட்டக்களப்பில் தொடர்ந்து போட்டியிட்டு வெற்றி பெற்று வந்த தமிழரசின் மூத்த தலைவர்களுள் ஒருவரான செல்லையா இராஜதுரை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமாகவும் அப்போது எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த அமிர்தலிங்கத்துடன் முரண்பட்டு எழுபதுகளின் கடைசியில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் பாய்ந்தார். அவரை சட்டப் பிரச்சினைகளில் இருந்தும் விடுவித்து தம்பக்கம் அரவணைப்பதற்காக அரசமைப்பு திருத்தங்களைக் கொண்டு வரவும் ஏற்பாடு செய்தார் ஜே.ஆர்.

இராஜதுரைக்கு வெகுமதியாக, இந்து கலாசார அபிவிருத்தி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. அவர் சிவநாயகம் ஐயாவுக்கு மிக நெருங்கிய நண்பர். மட்டக்களப்பில் ஒரு பெரும் அரசியல் சக்தியாக இராஜதுரை காலூன்றுவதற்கு அப்போது 'சுதந்திரன்' பத்திரிகையிலும், அதன் மூலம் தமிழரசிலும், தந்தை செல்வாவிடமும் செல்வாக்குச் செலுத்திய சிவநாயகம் ஐயாவின் பங்களிப்பு பெரிதும் உதவியது .

இராஜதுரையும் சிவநாயகமும் நண்பர்கள் என்றாலும் சிவநாயகத்தை 'அண்ணன்' என்றே எப்போதும் இராஜதுரை அழைத்தார். 'சிவநாயகம் சொல்லும் இடத்தில் இராஜதுரை நிற்பார் - அரசியலிலும் பிற விடயங்களிலும்' என்று ஒரு பேச்சு அப்போது இருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் எப்போதும் முரண்பட்டு நிற்கும் தினபதி, உட்கட்சிப் பிரச்சினையில் எல்லாச் சமயங்களிலும் இராஜதுரை பக்கம் என்ற குற்றச்சாட்டும் இருந்தது உண்டு. இராஜதுரையை எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடாது தனது தம்பியாக அரவணைத்தார் சிவநாயகம் ஐயா என்றும் பேச்சும் அடிபடும். இவை பற்றி எல்லாம் நான் நேரில் கண்டவன் அல்லது அறிந்தவன் அல்லன். மூன்றாம், நான்காம் தரப்புக்கள், ஆள்கள் மூலம் நான் அறிந்தவை இவை.

இவரைத் தவிர ஆசிரியர் சிவநாயகத்துக்கு இன்னொரு நண்பர் இருந்தார். அவர் அந்தக் காலத்தில் மாநிலக் கல்விப் பணிப்பாளராக இருந்தவர். அவர் பெயர் லக்ஷ்மண ஐயர். கல்விப் பணிப்பாளரை அவ்வேளையில் வித்தியாதிபதி என்றும் கூறுவர். இவரது துணைவியார் பின்னாள்களில் கம்பன் கழகத்தின் புகழ்பெற்ற பேச்சாளர் திருமதி பாலம் லக்ஷ்மண ஐயர்.

சரியான தமிழ் பேச வேண்டும், எழுத வேண்டும் என்பதில் கறாராக இருப்பார் லக்ஷ்மண ஐயர். 'நல்ல தமிழ் எழுதுவது எப்படி?' - என்று பல புத்தகங்களை எழுதி வெளியிட்டவர். எப்போதும் நல்ல தமிழே எழுத வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கும் ஆசிரியர் சிவநாயகம் ஐயாவும் லக்ஷ்மண ஐயரும் நெருங்கிய நண்பர்களானமை வியப்பில்லை அல்லவா?

பத்திரிகைகள் தமிழைச் சரியாகப் பயன்படுத்துவதில்லை என்ற ஆதங்கம் லக்ஷ்மண ஐயருக்கு உண்டு. எனவே பத்திரிகைகளுடன் - குறிப்பாக 'தினபதி'யுடன் - அடிக்கடி தொடர்பு கொள்வார் அவர் - தமிழ்ப் பிழைகளைத் திருத்தச் செய்வதற்காக.

காலையில் அவர் அழைப்பு தினபதிக்கு வந்தது என்றால் அலுவலகம் பரபரப்பாகும். ஏதோ ஒரு பக்கத்தில் பெரிய தமிழ்ப் பிழை போய்விட்டது, எந்த உதவி ஆசிரியர் இன்று ஆசிரியரிடம் அல்லது துணை ஆசிரியரிடம் மாங்களம் வாங்கப் போகின்றார் என்று எல்லோரும் தேடுவார்கள்.

இந்த லக்ஷ்மண ஐயர் பின்னாள்களில் ஐந்தாறு ஆண்டுகள் கழித்து சென்னையில் எனக்கும் பெரும் ஆபத்பாந்தவனாக வந்தார். அதன் மூலம் இந்திய அமைதிப்படையின் அதீத நெருக்கடிகளுக்கு மத்தியிலும் யாழ்ப்பாணத்தில் நான் பணியாற்றிய 'உதயன்' கொடிகட்டிப் பறப்பதற்கு வசதி கிட்டியது. அந்த நேரத்தில் யுத்தத்தில் மோதிக் கொண்ட விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப் படைக்கும் இடையில் - இரு தரப்புகளுக்கும் தண்ணி காட்டி கொண்டு - 'உதயன்' நிற்காமல் ஒடியது.

மரணங்கள் நிறைந்த யாழ்ப்பாண யுத்த பூமியில் நான்கு தினசரி பத்திரிகைகளில் வெளிவந்த இடத்தில் 'உதயன்' மட்டுமே அவ்வேளையில் தனித்து தாக்குப் பிடித்தது என்றால் அதற்கு காரணம் இரண்டு தரப்புகளையும் - புலிகள், இந்தியப் படை ஆகிய இரண்டு பக்கத்தினரையும் - சம தூரத்தில் வைத்துக் கையாளும் வாய்ப்பு அல்லது இயலுமை உதயனுக்குக் கிட்டியமையாலாகும்.

அந்த வேலையை நான் சாதிப்பதற்கு பெரும் துணையாய் அமைந்தது சிவநாயகம் ஐயாவின் மூலம் அறிமுகமான லக்ஷ்மண ஐயரின் தொடர்புதான்.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன், பிரதித் தலைவர் மாத்தையா, புலிகளின் யாழ். தளபதியாக இருந்த கிட்டு, மதியுரைஞர் பாலசிங்கம், பேச்சாளர் யோகரத்தினம் யோகி எல்லோருடனும் எனக்கு நெருங்கிய பரிச்சயமும் தொடர்பும் ஊடாட்டமும் தாராளமாக இருந்தன.

ஆனால், இந்திய அமைதிப்படை புதிய தரப்பு. பெரும்பாலும் அதன் உயர் அதிகாரிகள் வட இந்தியர்கள். ஹிந்தி அல்லது பிற மொழி பேசுபவர்கள். யுத்தத்துக்கு மத்தியில் அவர்களுடன் நெருங்கிப் பழகி நட்புறவை ஏற்படுத்திக் கொள்வது சாத்தியமானதாக இருக்கவில்லை.

அதனால் இந்திய அமைதிப்படைகள் - புலிகள் மோதல் வெடித்தமையை அடுத்து நாங்கள் (உதயன் பத்திரிகை) சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டோம். இந்தியப் படைகளின் அழுத்தம் எல்லை கடந்தது.



'வீரகேசரி' பத்திரிகை நவராத்திரி விழாவில் அதன் இணை ஆசிரியர் எஸ்.டி.எஸ்.

யாழ்ப்பாணத்தில் புலிகள் - இந்தியப் படைகள் மோதல் வெடித்த போது இந்தியப் படைகள் செய்த முதல் காரியம் புலிகள் ஆதரவுப் போக்கு கொண்டிருந்தவை எனக் கூறப்பட்ட 'முரசொலி' பத்திரிகை மற்றும் 'ஈழமுரசு' பத்திரிகை நிறுவனங்களுக்குக் குண்டு வைத்துத் தகர்த்தது தான். நடுநிலைப் பத்திரிகை என்று கருதி 'உதயன்', 'ஈழநாடு' பத்திரிகைகளை விட்டுவிட்டார்கள் போலும்.

ஆனால் இந்தியப் படைகள் - புலிகள் நேரடி மோதல் வெடித்த பின்னர் பக்கச் சார்பாக செய்தி வெளியிடுகின்றனர் என்று குற்றம் சுமத்தி, இந்தியப் படைகளின் பாதுகாப்பிலும் நிர்வாகத்திலும் இருந்த யாழ்ப்பாணத்தில் 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகத்துக்குள் புகுந்து அந்த நிறுவனத்தின் அச்சு இயந்திரத்துக்குக் குண்டுவைத்துத் தகர்த்து அந்தப் பத்திரிகையைத் தடுத்தனர் புலிகள். அதனால் யாழ்நகரில் தனித்துப் போன உதயன் அலுவலகத்திற்குள் இந்திய இராணுவம் புகுந்து உள்ளேயே முகாம் அமைத்தது - பாதுகாப்பு வழங்குகிறோம் என்ற பெயரில்.

இதனால் உதயனுக்கு இந்தியப் படை அழுத்தம் எல்லை மீறியது. எந்தச் செய்தியைப் போட்டாலும் இந்திய இராணுவ அதிகாரிகள் உடனேயே நேரில் பாயும் நிலைமை.

அழுத்தம் தாங்க முடியாமல் ஆசிரியர் கானமயில்நாதன் பணியை விட்டே விலகத் தீர்மானித்தார். வரும் பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும் நானே தனித்துப் பொறுப்பேற்பேன் என உறுதி அளிக்க வேண்டிய நிலைமை வந்தது. அளித்தேன். அந்த நிறுவனத்தை விட்டு நானாக வெளியேறும் வரை அடுத்த 22 வருடங்கள் அதனை மனநிறைவாக - துணிச்சலுடன் - எந்த அழுத்தத்துக்கு மத்தியிலும் பயந்து விட்டு விட்டு ஓடாமல் - நின்று, நிலைத்து, நீடித்து ஆற்றினேன்.

இந்தியப் படைகளின் அழுத்தம் கூடியபோது ஒரு விடயத்தை அவதானித்தேன். ஈழத் தமிழர்களுக்கு எதிராக இந்தியப் படைகள் அநீதி செய்கின்றன, துன்புறுத்துகின்றன அல்லது தொல்லைப்படுத்துகின்றன என்று நாம் செய்தி வெளியிட்டால் - அல்லது இங்குள்ள அரசியல் பிரமுகர் கூறுகின்றார் என்று நாம் செய்தி வெளியிட்டால் உடனே வந்து பாயும் இந்திய அதிகாரிகள், அதே கருத்தை இந்திய, தமிழக அரசியல்வாதிகள் கூறினர் என்று செய்தி வெளியிட்டால் வாயே திறக்க மாட்டார்கள், கம்மென்று இருக்கின்றார்கள் என்பதை ஒருசில வாரங்களிலேயே நான் கண்டுபிடித்து விட்டேன். இந்தியப் படைகள் இலங்கையில் அட்டூழியம் புரிகின்றன என கருணாநிதி சொன்னார், சிவாஜி கணேசன் கூறினார், ஜெயலலிதா கண்டித்தார், ஜானகி அம்மா வெதும்பினார் என நாம் செய்தி பிரசுரித்தால் கூட இந்தியப் படைகள் பம்முவதை பலமுறை நான் அவதானித்தேன்.

ஆகவே ஒரு முடிவுக்கு வந்தேன். இந்தியப் படைகளுக்குத் தண்ணி காட்டுவதானால் நான் சென்னையிலிருந்து இயங்குவதுதான் ஒரே வழி எனத் தீர்மானித்தேன்.

உதயன் நிர்வாக இயக்குநர் சரவணபவன் மூலம் ஆனந்த விகடன், ஜூனியர் விகடன் ஆசிரிய பீடம் மற்றும் அச்சக பிரிவு போன்றவற்றிலும், தமிழக தினகரன் பத்திரிகை அச்சிடும் பிரிவிலும் பயிற்சி பெறும் திட்டம் ஒன்றை ஒழுங்கு செய்து கொண்டு சென்னை போய்ச் சேர்ந்தேன் - 1988 ஜனவரியில்.

ஆனால், ஒரேயொரு பிரதான பிரச்சினை. யாழ்ப்பாணத்தில் ஒழுங்கான தொலைபேசி சேவை அப்போது இல்லை. பக்ஸ் வசதியும் அப்போது இல்லை. இணையத்தளங்களும் அப்போது கிடையா. செய்திகளை அஞ்சல் மூலம் அனுப்புவதுதான் ஒரே வழி. நான் சென்னையில் தபாலில் அஞ்சலைச் சேர்த்தால் அது யாழ்ப்பாணத்தைச் சென்றடைய ஒரு வாரம் ஆகும். யாழ்ப்பாணத்தில் எனது பத்திரிகையை எனது அலுவலகம் அஞ்சல் செய்தால் அது சென்னையில் என்னை எட்டுவதற்கு பத்து நாள்கள் செல்லும்.

செய்திகளை விமானத்தில் இலங்கை செல்வோரிடம் கொடுத்து விடுவதற்காக மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு போனால் இலங்கைப் பயணிகளைத் தேடிக் கண்டுபிடிப்பதே கஷ்டம். அப்படிக் கண்ணில் அகப்பட்டாலும், செய்தி என்வலப் என்றால் காத தூரம் ஒடி விடுவார்கள். ஒட்டிய என்வலப்பை யாருமே ஏற்க மாட்டார்கள். திறந்த என்வலப் என்றால் செய்தி என்று அறிந்ததும் பலரும் ஏற்க மறுத்தனர். தெரிந்தவர்கள் யாரும் ஏற்றாலும், இலங்கை முத்திரைகான பணத்தை கொடுத்தாலும், அவர் கொழும்புக்குப் போய், நேரம் கிடைக்கும்போது முத்திரை வாங்கி ஒட்டி, கொழும்பில் அதனைத் தபாலில் சேர்த்தால், அது யாழ்ப்பாணத்தில் என் அலுவலகத்தை எட்டும்போது ஒரு வாரம் ஆகிவிடும்.

இதற்கிடையில் சென்னையில் இருக்கும் எனக்கு யாழ்ப்பாணத்தில் எனது பத்திரிகையில் வெளியான செய்திகள் என்ன - ஏன் பத்திரிகையே அந்த யுத்த பூமியில் நிற்காமல் தொடர்ந்து வெளி வருகின்றதா என்பது கூட - தெரியாத நிலைமை.

அந்தச் சமயத்தில்தான் அப்போது சென்னையில் நான் இருந்த வீட்டிலிருந்து இரண்டு தெரு தள்ளி இருந்த லக்ஷ்மண ஐயர் பற்றி அறிந்தேன். சிவநாயகம் ஐயாவின் சிஷ்யன் என்ற தகதியுடன் அவரை நெருங்கினேன்.

எல்லா விடயங்களும் ஒரே நாளில் தலைகீழாக மாறின. தினசரி காலை 7 மணிக்கு நான் தயார் செய்யும் எனது செய்தி என்வலப் அன்று மதியம் 12 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உதயன் ஆசிரியரின் அலுவலகத்தில் தவறாது இருக்கும். காலை 10 மணிக்கு அன்றன்றைய 'உதயன்' நாளிதழ் சென்னையில் என் கைகளில் இருக்கும். நினைத்துப் பார்க்க முடியாத அதிசயம் அங்கு தொடர்ந்து நான்கைந்து மாதங்கள் அரங்கேறியது. நான் யாழ்ப்பாணத்திலிருந்து உதயனைக் கையாளலாம், இந்தியப் படையை அங்கிருந்தே சமாளிக்கலாம் என்ற நிலைமை வரும் வரை இந்த வசதி நீடித்தது. அது மாத்திரமல்ல, இந்தியப்படைகள் தரப்பில் இருந்து வந்த அழுத்தங்களையும் முகம்கொடுத்து சமாளிக்கும் பலமான பின்புல வலிமையையே அது எனக்கு ஏற்படுத்தித் தந்தது.

இதெல்லாம் எப்படி சாத்தியமாயின்? மென்மையாகப் பேசுகின்ற ஒரு பிராமணர். இலங்கையில் வித்தியாபதியாக இருந்தவர். சிவநாயகம் ஐயாவின் நண்பர். சிவநாயகம் ஐயா மூலம் கிடைத்த அந்த அறிமுகத்தினால் கிட்டிய அந்தப் பேரதிசயம் என்ன? நாளை விவரிப்பேன்.

(வளரும்......)

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 09 | கணிதம் | அலகு 19

## பைதகரசின் தொடர்பு




செங்கோண முக்கோணி


முக்கோணி ஒன்றின் ஒரு கோணம் செங்கோணம் $90^0$ எனின் அது செங்கோண முக்கோணி எனப்படும்.
அதில் செங்கோணத்துக்கு எதிரான பக்கம் செம்பக்கம் எனவும் ஏனைய இரண்டு பக்கங்கள் செங்கோணத்தை ஆக்கும் பக்கங்கள் எனவும் அழைக்கப்படும்.

பைதகரசின் தொடர்பு

ஒரு செங்கோண முக்கோணியின் செம்பக்கத்தில் அமைகின்ற சதுரத்தின் பரப்பளவு, செங்கோணத்தை ஆக்கும் பக்கங்களின் மீது வரையப்பட்டுள்ள சதுரங்களின் பரப்பளவுகளின் கூட்டுத்தொகைக்குச் சமனாகும்.





உதாரணம்




| | | |
|---|---|---|
| $h^2 = f^2 + g^2$ | $h^2 = f^2 + g^2$ | $h^2 = f^2 + g^2$ |
| $h^2 = (3)^2 + (4)^2$ | $g^2 = h^2 - f^2$ | $f^2 = h^2 - g^2$ |
| $h^2 = 9 + 16$ | $g^2 = (5)^2 - (3)^2$ | $f^2 = (5)^2 - (4)^2$ |
| $h^2 = 25$ | $g^2 = 25 - 9$ | $f^2 = 25 - 16$ |
| $h = 5$ | $g^2 = 16$ | $f^2 = 9$ |
| | $g = 4$ | $f = 3$ |

பெறுமானம் காண்க.




01. ........................ 02. ........................ 03. ........................ 04. ........................




01. ........................................... 02. ...........................................





03. ........................................... 04. ...........................................




05. ........................................... 06. ...........................................






07. ........................................... 08. ...........................................





09. ........................................... 10. ...........................................

ஒவ்வொரு உருவிலும் அட்சரத்தால் குறிக்கப்பட்ட பக்கத்தின் நீளத்தைக் காண்க








உருக்களின் சுற்றளவை காண்க.





பயிற்சி

01. சாய்சதுரம் ABCD இன் மூலைவிட்டம் BD= 16cm, AC=12cm ஆகும். ஆவை O இல் ஒன்றையொன்று செங்குத்ததாக இருசமகூறிடுகின்றன. சாய்சதுரத்தின் சுற்றளவைக் காண்க.





..................................................
..................................................
..................................................

02. சதுரம் ABCD இன் மூலைவிட்டம் AC=12cm அதன் பரப்பளவைக் காண்க.




..................................................................
..................................................................
..................................................................
..................................................................

03. செவ்வகம் ABCD இன் பக்கம் AB=24cm மூலைவிட்டம் AC=25cm எனின் அதன் பரப்பளவைக் காண்க.




..................................................................
..................................................................
..................................................................
..................................................................

04. 13m நீளமான ஏணி சுவரின் அடியிலிருந்து 5m தூரத்திரல் சாய்வாக வைக்கப்பட்டது. ஏணியின் மறுமுனை சுவரின் எவ்வளவு உயரத்தில் இருக்கும்.




..................................................................
..................................................................
..................................................................
..................................................................

ஆக்கம் - தாமினா சுபாகரன் - கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி) யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.
வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம் ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.

# இரண்டாவது பிரேத பரிசோதனைக்காக தோண்டப்பட்டது ஹிஷாலினியின் சடலம்

டயகம மூன்றாம் பிரிவு பகுதியில் புதைக்கப்பட்ட ஹிஷாலினியின் சடலம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 8.30 மணியளவில் தோண்டியெடுக்கப்பட்டது.

சுகாதார விதிமுறைக்கமைய விசேட வைத்திய குழுவினர்கள் முன்னிலையில் சிறுமி ஹிஷாலியின் சடலத்தை தோண்டி எடுக்குமாறு நுவரெலியா மாவட்ட நீதி மன்ற நீதிபதி லுசாகா குமாரி தர்மகீர்த்தி உத்தரவிட்டிருந்தார்.

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு அமைவாக பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் விசேட வைத்திய குழுவின் முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்டு இரண்டாவது பிரேத பரிசோதனைக்காக பேராதெனிய போதனா வைத்தியசாலைக்கு பாதுகாப்பான முறையில் அனுப்புமாறு அவர் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே இரண்டாவது பிரேத பரிசோதனைக்காக மூன்று சட்ட வைத்தியர்கள் குழுவின் மற்றும் பிரதேச



நீதிவானின் மேற்பார்வையில் ஹிஷாலினியின் சடலம் மீண்டும் தோண்டியெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், சிறுமியின் தாயார் தனது மகளின் மரணத்தில் சந்தேகம் உள்ளது எனவும், புதைக்கப்பட்ட மகளின் உடலை தோண்டி மீண்டும் பிரேத பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரி மனித உரிமை ஆணைக்குழுவில் மனு ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சமூக ஊடகங்களில் வீராப்பு வசனங்களைப் பேசி தமிழ்,முஸ்லிம் உறவை குலைக்க முயற்சிக்காதீர்!

## கலாநிதி ஜனகன் கோரிக்கை

சிறுமி ஹிஷாலினிக்கு நீதி கிடைக்க வேண்டும் என் பதில் நூறுவீதம் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. அது அரசியல் கடந்த ஒரு நீதி சார்ந்த விடயம் அதற்காக வேண்டி என்னுடைய ஜனனம் அறக்கட்டளை ஊடாக சிறுமியின் குடும்பத்துக்கு நீதி கிடைக்க வேண்டுமான உதவிகளை ஜனநாயக அடிப்படையில் மேற்கொள்ளவும் தாங்கள் தயாராக உள்ளோம்.

ஆனால் தற்போது பார்க்கப் போனால் சமூக வலைத்தளங்களைத் திறந்தாலே இந்தச் சிறுமியின் விவகாரத்தை வைத்து இரு தரப்பினரும் மாறி மாறி அரசியல் செய்வதைத் தெளிவாக காணக்கூடியதாக இருக்கின்றது என ஜனனம் அறக்கட்டளையின் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை திருநாட்டைப் பொருத்தமட்டில் மதங்களால் தமிழ்,முஸ்லிம் என்று வேறுபட்டாலும் மொழியால் தமிழ்,முஸ்லிம் ஆகிய சமூகங்கள் ஒன்றாகப் பிணைந்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

இரு சமூகங்களுக்கிடையில் பாரிய தொப்புள்கொடி உறவு இருக்கிறது. இந்த விவகாரத்தை வைத்து சமூக ஊடகங்களில் தனிப்பட்ட காரணங்களுக்காக இதை அரசியல் மயமாக்கி தமிழ்,முஸ்லிம் உறவைச் சீர்குலைக்க தயவுசெய்து முயற்சிக்க வேண்டாம் என்று சமூகஊடகங்களில்வீராப்புவசனம்பேசிகொள்பவர்களிடம் மிகப் பணிவாக வேண்டிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சிறுமியின் விவகாரம் தமிழ்,முஸ்லிம்,சிங்களம் என்பதைத் தாண்டி அப்பாவி சிறுமிக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் நாங்களும் நீங்களும் குரல் கொடுக்க வேண்டுமே தவிர தனிப்பட்ட அபிலாஷைகளுக்காகவும், அரசியல் நோக்கங்களுக்காகவும் உங்கள் குரல்களை சமூக ஊடகங்களில் எழுப்புவதை சற்று சிந்தித்துச் செயற்படுங்கள்.

இவ்வாறான ஒரு செயற்பாடு தொடர்ந்தும் சென்றால் தமிழ் முஸ்லிம் உறவுகளுக்கு இடையிலே அதிக விரிசலை ஏற்படுத்தும் என்ற சந்தேகம் ஒன்று என்னுள் தோன்றுகிறது.

இந்தச் சிறுமி மாத்திரமல்ல இனிவரும் காலங்களில் எந்தச் சிறுமிக்கும் இவ்வாறான நிலை ஏற்படக் கூடாது என்பதற்காக நாங்கள் இனம், மதம் கடந்து ஒன்று சேர வேண்டும் என்பதை உங்களிடம் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

எதிர்காலத்தில் குறிப்பாக என்னுடைய ஜனனம் அறக்கட்டளையின் ஊடாக சிறுவர், சிறுமிகள் வேலைக்கு அமர்த்தப்படுவது தொடர்பிலான விழிப்புணர்வு செயற்திட்டங்களைசமூகவலைத்தளங்கள் ஊடாகவும், நேரடியாகவும் மேற்கொள்ள இருக்கின்றோம்.

தற்போது இந்தச் சம்பவத்துக்குப் பிற்பாடு கொழும்பு மாவட்டத்தில் மலையகத்திலிருந்து வீட்டு வேலைக்கு வந்து வேலை செய்கின்றவர்கள் சிலர் திருப்பி அனுப்பப்படுகின்றனர் என சமூக ஊடகங்கள் ஊடாக அறிகின்றோம். இது ஒரு பண்பற்ற செயல் என்பதையும் சொல்லிக் காட்ட விரும்புகின்றேன்.



ஆனால், இவர்களுக்கான ஒரு சிறந்த தீர்வாக சிறுவர்கள் அல்லாமல் வீட்டு வேலைக்கு அமர்த்தப் படுகின்றவர்கள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் ஊடாக இந்த வேலை சார்ந்த துறையில் பயிற்றுவிக்கப் பட்டு நிறுவனத்தின் ஊடாக நிறுவனத்தின் கண்காணிப்பின் கீழ் வேலைக்கு அமர்த்தப்பட்டால் இவ்வாறான ஒரு பிரச்சினைக்குத் தீர்வைக் காணலாம்.

இந்த விடயத்துக்கு எங்களுடைய கல்வி நிறுவனமும் முன்வரத் தயாராக உள்ளது என்பதையும் குறிப்பிட்டு கொள்ள விரும்புகிறோம்.

அதுமாத்திரமல்ல இன்றைய சிறுவர்கள், இளைஞர்கள் குறிப்பாக போதைவஸ்துக்கு அடிமையாகி வாழ்க்கையை சீர் அளிப்பதையும் சமூக ஊடகங்களுக்கு முன் கொண்டுவந்து அதற்கு ஒரு திறந்த தீர்வுத் திட்டத்தையும் மேற்கொள்ள சமூக ஊடக ஆர்வலர்கள் முன்வர வேண்டும் என்பதையே நான் எதிர்பார்க்கிறேன்.

அதை விட்டு விட்டு வெறுமனே சமூக வலைதளங்களில் வீராப்பு பேசிக்கொண்டு வீடுகளில் இருப்பதை நான் விரும்பவில்லை. – என்றார்.

# 5 லட்சத்துக்கு மேற்பட்டோருக்கு ஒரே நாளில் தடுப்பூசி செலுத்தல்!

## இலங்கை சாதனை என உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டு

ஒரேநாளில் 5 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்திய இலங்கையின் சாதனையை உலக சுகாதார அமைப்பு பாராட்டியுள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸுக்கு எதிராக கடந்த வியாழக்கிழமை 5 லட்சத்து 15 ஆயிரத்து 830 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்த மைல்கல்லை எட்டிய சுகாதார அமைச்சகம் மற்றும் அரசாங்கத்துக்கு உலக சுகாதார அமைப்பு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஒரேநாளில் 5 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது.

# நாட்டின் கலைத்துறையை மீட்டெடுக்க நடிகர் ரஞ்சன் ராமநாயக்க அவசியம்

## அவரை விடுதலை செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்

நாட்டின் கலைத்துறை மிகமோசமான நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வரும் நிலையில், அதனை மீட்டெடுப்பதற்கு நடிகர் ரஞ்சன் ராமநாயக்கவின் பங்களிப்பு மிகவும் அவசியம் என்றும் அவரை சிறையில் அடைத்து வைத்து கலைத்துறையை முன்நகர்த்திச்செல்வது கடினம் என்றும் இலங்கையின் திரைத்துறையின் முன்னணிக் கலைஞர்கள் ஒன்றிணைந்து சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே இதனைக் கருத்திற்கொண்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலையை வலியுறுத்தி, நாட்டின் திரைத்துறையின் முன்னணிக் கலைஞர்கள் ஒன்றிணைந்து கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தனர். அதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட நடிகர் அர்ஜுன் கமலநாத் பின்வருமாறு கூறினார் –

பல்வேறுவிதமான அரசியல் நிலைப்பாடுகளைக்கொண்ட கலைஞர்கள் இப்போது ரஞ்சன் ராமநாயக்கவிற்காக ஒன்றிணைந்திருக்கின்றார்கள். அவருடன் நான் பலவருடகாலமாகப் பேணிய தொடர்பின் அடிப்படையில் நோக்குகையில், எத்தகைய பிரச்சினைகள் என்றாலும் அவர் சிறையில் அடைக்கப்பட வேண்டிய ஒருவரா? என்ற கேள்வி என்னுள் எழுகின்றது. நான் நீதிமன்றத்துக்கு



மதிப்பளிக்கின்றேன். ஆகையால் அது குறித்து எதனையும் பேசவிரும்பவில்லை.

நாமனைவரும் ஒத்த தன்மையுடையவர்கள் அல்லர். அதேபோன்று ரஞ்சன் ராமநாயக்கவும் மிகுந்த கலைத்திறனையும் விரைவில் ஆவேசமடையும் தன்மையையும் கொண்டவராவார். அதுமாத்திரமன்றி யாரையும் உடன்கொண்டிராத, சுதந்திரமானதும் சுயாதீனமானதுமான நிலைப்பாட்டைக்கொண்ட நபராவார். அவர் சுதந்திரத்தை அதிகமாக விரும்பியதன் காரணமாக குடும்பக் கட்டமைப்பிற்குள் நுழையவில்லை. எனவே, எந்தவொரு விடயத்தைச் செய்யும்போதும் அல்லது பேசும்போதும் இருமுறை சிந்திக்கும் நிலையில் அவர் இருக்கவில்லை.

இந்நிலையில் தற்போது நாட்டின் கலைத்துறை மிகமோசமான நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றது. அதனை மீட்டெடுப்பதற்கு ரஞ்சன் ராமநாயக்கவின் பங்களிப்பு மிகவும் அவசியமானதாகும். ரஞ்சன் ராமநாயக்க கலைத்துறையின் 'சூப்பர் ஸ்டார்' ஆவார். அவரை சிறையில் அடைத்துவைத்து இந்தத் துறையை முன்கொண்டுசெல்ல முடியாத நிலையேற்பட்டுள்ளது. – என்றார்.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 09 | கணிதம் | அலகு 18

## ஒரு வட்டத்தின் பரிதி - விடைகள்

**01. வட்டம்**

1. மையம்
2. ஆரை
3. BC - விட்டம்
4. DE - நாண்
5. BC - 8cm
6. d = 2r

**02. வட்டமொன்றின் பரிதி காணல்**

| $(\pi = \frac{22}{7})$ | $(\pi = 3.14)$ |
|---|---|
| 01. 44cm | 01. 62.8cm |
| 02. 132 cm | 02. 314cm |
| 03. 22cm | 03. 191.54cm |
| 04. 66cm | 04. 109.9m |
| 05. 11cm | 05. 135.02m |
| 06. 22cm | 06. 12.56cm |
| 07. 88cm | 07. 94.2cm |
| 08. 123.2cm | 08. 64.37cm |
| 09. 48.4cm | 09. 10.99m |
| 10. 18cm | 10. 9.76m |

**03. சுற்றளவைக் கொண்ட வட்டங்களின் ஆரைகளைக் காணல்**

$(\pi = \frac{22}{7})$

01. r = 14cm
02. r = 3.5m
03. r = 1.67cm
04. r = 15.4cm
05. r = 4.45m
06. r = 2.45cm

**04. அரைவட்டத்தின் சுற்றளவு**

01. $(\pi = \frac{22}{7})$

01. 36cm
02. 54cm
03. 72cm
04. 27cm

02. d = 21cm

03.

01. 264cm
02. 264m
03. 5 சுற்றுகள்

**05. கூட்டுருவின் சுற்றளவு**

01. 9.32cm
02. 101.14cm
03. 48cm
04. 88cm
05. 26.57cm
06. 60.85cm
07. 53.71cm
08. 56.55cm

**ஆக்கம் - தாமினா சுபாகரன் - கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி) யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம் ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 84

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**254. இந்தப் பத்திரிகையில் “ஒப்பந்தத்துக்கு 34 வயது” என்ற ஆசிரியர் தலையங்கத்தைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்? அது தோற்றுவிட்டதான அபிப்பிராயம் தானே தெரிவிக்கப்படுகின்றது?**

முதலாவது ஒப்பந்தம் வேறு, 13ஆவது சரத்து வேறு. அதன் நடைமுறையாக்கம் வேறு. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் நடைமுறையாக்கத்தில் இந்திய இராஜதந்திரம் கடைசியில் வெற்றிகாணவில்லை என்பதுஒருமறுக்கமுடியாதஉண்மையாகத்தோன்றுகின்றது.

*“ஒப்பந்தத்தின் வாசகங்களை திணிப்பதற்காக இலங்கைக்குள் ஆயுதங்கள், படை பட்டாளங்களுடன் ‘இந்திய அமைதிப் படை’ என்ற பெயரில் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஓர் இராணுவ நடவடிக்கையை - தமிழர் தரப்புக்கு எதிரான ஆக்கிரமிப்பு படையெடுப்பு போல - முன்னெடுத்து தமிழர் தாயகத்தில் இதன்மூலம் பேரழிவுகளை ஏற்படுத்திய இந்தியப்படை, இலங்கையில் தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்வதற்கான முயற்சி என்ற பெயரில் ஆயிரத்துக்கும் அதிகமான படைவீரர்களைத் தானும் இழக்க வேண்டியதாயிற்று.*

*“ஒப்பந்தம் செய்த காலத்தில் அதை நடைமுறைப் படுத்துவதற்காக ஒப்பந்தத்தில் நேரடியாக சம்பந்தப் படாத ஒரு தரப்புக்கு எதிராக பெரிய இராணுவ நடவடிக்கையை பெரும் எடுப்பில் தொடுத்து, இரண்டு வருடங்களுக்கு மேல் கொடூர யுத்தமாக அதைத் தொடர்ந்த புதுடில்லி, தான் ஒப்பந்தம் செய்து கொண்ட மற்றைய தரப்பை அந்த ஒப்பந்த வாசகத்துக்கு கட்டுப்பட வைத்து, அவற்றை செய்விப்பதற்கு வலியுறுத்த வழியின்றி, கடந்த 34 வருடங்களாக அணில் ஏறவிட்டு நாய் போன்று - நிலத்தில் படுத்தவாறு மரத்தை பார்த்துக் குரைக்கும் நாய் போல - பலனின்றி குரைத்து கொண்டிருக்கிறது.”*

– ஆசிரிய தலையங்கத்தின் இந்தக் கூற்றில் முழுமையாக உடன்படுத்தல் முடியாது. *“அமைதிப் படை”* என்ற பெயரில் என்று அடைமொழி வைத்து, பின் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஓர் இராணுவ நடவடிக்கையை “தமிழர் தரப்புக்கு எதிரான ஆக்கிரமிப்பு படையெடுப்பு போல” என்ற வார்த்தைகளால், அவர் எந்த சால்வையை எந்த விததலைப்பாகையாக சுற்றுகிறார் என்று புரிந்து கொள்ளலாம்.

“இதற்கான காரணகள் எதுவாகவும் இருக்கலாம்.



இத்தகைய தோல்விக்கு - பின்னடைவுக்கு / காரணமான சூத்திரதாரிகள் யாராகவும் இருக்கலாம்” என்று சொல்லும்போது குஞ்சத்தை தலைப்பாகைக்குள் புதைப்பதும் தெரிகிறது.

அந்த சூத்திரதாரிகள் யாரென்பதும் தலையங்ககாரருக்குத் தெரியும். நெஞ்சை தொட்டு சொல்வது கஷ்டம். ஆனாலும் அதற்கு முத்தாய்பு வைக்க அவர் மதியுரைஞர் பாலசிங்கத்தின் சொற்பிரயோகங்களைத் துணைக்கிழுக்கிறார்.

இந்தியப்படை, அமைதிப்படையாகத்தான் வந்தது. திம்பு பேச்சுவார்த்தைகளின் பின் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தைகளினாலும் புரிந்துணர்வுகளினாலும் தமிழர் எதிர்நோக்கி கொண்டிருந்த ஓர் இனப்படுகொலையை தவிர்ப்பதற்கென ஆதங்கம் இருந்தது. அந்த நலனில் இந்திய நலனும் இருந்தது. ஆனால் இந்திய நலனிலும் அது, தமிழர் தரப்புக்கோ, தமிழருக்கோ எதிரான ஆக்கிரமிப்பு படையாக வரவில்லை. அவை புரியப்படவேண்டும். அத்தோடு நாங்களே அதற்கான சூத்திரதாரிகளே, சிங்கள பேரினவாதத்துக்குக் கைகொடுத்து துணைபோய் அவர்கள் வெளியேற வேண்டும் என்று நின்றார்கள்.

**255. அப்படியாயின் என்ன நடந்தது?**

“நீதி வேண்டி, அரசியல் உரிமைகள் வேண்டி, அடிப்படை மனித சுதந்திரங்கள் வேண்டி, இரத்தம் சிந்தி நிகழ்த்தப்பட்ட தமிழரின் தேசியப் பேராட்டத்தினது ஆழமான அறநெறிப் பண்பியல்புகளை இந்தியத் தலையீடு முற்றாகப் புறக்கணித்தது. ஒடுக்கப்பட்ட ஒரு மக்கள் இனத்தின் உணர்வலைகளை, தணியாத தியாகச்சுடர் விடும் அம்மக்களின் சுதந்திர வேட்கையை, இந்தியா அலட்சியம் செய்தது. மனிதாபிமானக் குறிக்கோளுடன் எமது பிரச்சினையில் தலையிட்டதாகக் கூறிய பாரததேசம் எமது மக்களுக்கு நீதியும் நியாயமும் வழங்க வேண்டிய தார்மீகக் கடப்பாட்டிலிருந்து நழுவியது” - இவை மதியுரைஞர் பாலசிங்கத்தின் வார்த்தைகள். அணில் ஏறவிட்ட நாய்போல் பிரேமதாஸாவின் பேச்சுவார்த்தைகளின் பின் சொன்னவை.

நீதி, நியாயங்களில், அறம் என்ற ஒன்றும் பாசப் பிணைப்பாக இழையோடுகிறது. அதை ஆங்கிலத்தின் நீதி நூல்களில் Equity என்று சொல்வார்கள்.

வெனிஸ் வணிகன்(**Merchant of Venice**) என்ற ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் சைலோக் பாத்திரம் இதை எடுத்துக் காட்டுகிறது. சைலோக் தான் கொடுத்த கடனுக்கு வாங்கியவரிடமும் அதற்குப் பிணை நின்ற நண்பனிடமும் கடனைத் திருப்பித் தராவிட்டால் அவர்கள் தம் உடம்பின் சதையில் ஒரு பகுதியை தரவேண்டுமென எழுதி வாங்கியிருந்தான். கடன் திருப்பப்பட்ட போதும் வட்டிக்காக சைலோக் பிணை நின்றவனிடம் அதற்கான தசையைக் கேட்டான். வழக்கை விசாரித்த நீதிபதி தசையை எடுக்கலாம், ஆனால் அதற்காக வெட்டும் போது ஒரு துளி இரத்தம் சிந்தக் கூடாது என்று நிபந்தனையிட்டார். நீதி எழுத்தில் பக்கம் இருந்தாலும், தீர்ப்பு அறத்தின் அடிப்படையில் அமைந்தது. அதைத் தான் மனுநீதிச் சோழனின் அறம் சார்ந்த நீதியும் கன்றை இழந்த பசுவிற்குத் தந்தது

தமிழ்த் தேசியத்தின் எல்லா அமைப்புகளுமே விடுதலைப் புலிகள் உட்பட, பாலசிங்கம் மதியுரைஞராக இருந்தது. வரைந்த தீர்மானங்களை இந்தியாவிற்கு கையளித்து வந்தனர். அந்த பேச்சு வார்த்தைகளில் தனித்தமிழீழத்திற்கு இந்தியா ஒத்துக் கொள்ளாது என்பது தெளிவாக அறியப்பட்டிருந்தது. அவை எல்லாவற்றையும் ஸ்ரீலங்கா அரசு நிராகரித்த பின்னும், பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் ஒரு தேசத்தின் கட்டமைப்புகளோடு ஒப்பந்தம் செய்யப்பட்டது.

அதை அமுல்படுத்த, ஸ்ரீலங்காவின் ஜே.ஆரை இந்திரா காந்தி காலத்திலிருந்தும் அப்படியே விடுதலைப் புலிகளை பற்றிய கணிப்பிருந்தாலும் இந்தியா படையை அனுப்பி வைத்தது. திம்பு தீர்மானங்களின் அடிப்படையிலான தமிழ் தேசத்தின் கட்டமைப்புகள் ஒப்பந்தத்தில் இருந்ததால், மற்றைய தேசியப் பரப்புக்கள் எல்லாம் அதை முதற்படியாக ஏற்று, ஆயுதப் போராட்டத்தை தள்ளிவைத்து முன்னேற விரும்பினார்கள். ஒரு தரப்பு மாறாக நின்றது. ஆயுதப் போராட்டம் முடக்கப்பட்டால் தமது ஏகோபித்த தலைமை இல்லாமல் போகலாம் என்று நினைத்தது. மக்களுக்காகப் பின்பற்ற வேண்டிய அறம் இங்குதான் தடம் புரண்டது.

லட்சியத்திற்கு பிடிவாதம் இருக்க வேண்டும். ஆனால் பிடிவாதமே லட்சியமானால் வேதனைதான் மிஞ்சும். அந்த வேதனைகள்தான் விளைந்தன.

இதனைத்தான் “தமிழர்களின் துரதிர்ஷ்டம்” என்ற இன்னொரு தலையங்கத்தில் ஆசிரியர் கூறுகிறார்.

இரண்டையும் இணைத்துப் பார்த்தால் சொல்லப்படுபவை விளங்கும்.

என்னை பொறுத்தவரை தமிழர்கள் தரப்பிலும் அவர்கள் பிடித்த கொடிகளால் இந்தியாவின் பால், அவர்களையும் இரத்தம் சிந்த வைத்து, தாங்களும் சிந்த வைத்ததில் அறம் இருக்கவில்லை. அதியமானை வாழ்த்தும் போது ஔவையார் ‘வரப்புயர’ என்று வாழ்த்தினார். அந்த வரப்பு உயர நீர் உயரும். நீர் உயர்ந்தால் நெல்லுயரும். நெல்லுயர்ந்தால் மக்கள் வளம் உயரும். அவர்கள் உயர்ந்தால் மன்னனே நீ உயர்வாய் என்று அர்த்தம் மூதாதையரிடமிருந்து. தமிழர்களுக்கு இவையும் மேலேயும் தெரியும். ஆனால் ஒப்பந்தத்தால் கிடைத்த வரத்தை கட்டாமல் நாங்கள் புது பரப்புகளைத் தேடிப் போனோம்.



**256. அந்த லட்சியப் பிடிப்பினால் ஸ்ரீலங்கா அரசு கடைசியில் நோர்வேயில் தமிழர் தரப்பின் நியாயங்களை ஒத்துக் கொண்டதே?**

நீங்கள் ‘பிடிப்பினால்’ என்று முலாம் பூசலாம். ஆனாலும் அந்த இணக்கங்களுக்குப் பிறகும் பிடிவாதங்கள் முன்னின்று ஒப்பந்தம்போல் ஒன்றும் காரியசித்தியாகவில்லையே? பழையபடி இந்தப் பிடிவாதங்களையே பாவித்து, சிங்களப் பேரினவாதம் தமிழர்களைக் குழிக்குள் தள்ளவில்லையா? மதியுரைஞர் பாலசிங்கம் தாங்கள் இந்தியாவை பகைத்தது எதிரிகள் ஆக்கியது தவறு என்று ஏற்றுக் கொள்ளவில்லையா?

இரண்டுக்கும் உள்ள வித்தியாசங்களையும் கணக்கில் கொள்ளவேண்டும். நோர்வே சமாதானத்தை பேசலாம். அதனை அமுல்படுத்த முடியாது. அதனை ஸ்ரீலங்கா – விடுதலைப் புலிகள்தான் ஒருமித்து அமுல் படுத்தலாம். அவர்கள் ஏகோபித்து தலைவர்களாக அவற்றை வரைந்ததால் மற்றத் தமிழ் பரப்புக்கள் விடுதலைப் புலிகள் இல்லாத பட்சத்தில் பார்வையாளராகவே இருக்கிறார்கள். தமிழர் அந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்தக் கோரி ஏன் நோர்வேயிடம் கேட்பதில்லை? செய்யப்பட்ட வருடங்களைக் கணக்கெடுப்பதில்லை?

ஆனால் இந்தியா இணக்கதாரியாக வரவில்லை. அமுல் நடத்த கூடிய திராணியுடன்தான் வந்தது. அதன் படைகள் வந்திறங்கியவுடன் தென்பகுதியில் நடந்த கலவரங்களும் ஏற்பட்ட கிலியும், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு பகுதிகளில் அத்துமீறிக் குடியேறியிருந்த சிங்களவர்கள் பஸ்களும் தட்டிவான்களும் பிடித்து இடங்களைக் காலி செய்து திரும்பியதும் நடந்தன. அவைதான் நடைமுறை யதார்த்தம். இந்த அலங்கோலங்களைப் பார்த்து திருகோணமலையில் முகாங்களுக்குள் அழைக்கப்பட்ட இராணுவத்தினர் தாம் வெளியேறி சிங்களவர்களுக்கு ஆதரவு தரக் கேட்டு, அந்த நிலைமையை ஜே.ஆர். இந்தியத் தளபதியிடம் கூற, அவர் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அப்படி வெளியேறினால் நடப்பது வேறு, முடங்கியே இருக்கச் சொல்லுங்கள் என்றார். இவைதான் அமைக்கப்பட்ட கட்டமைப்புகளை மேற்கொண்டு செல்ல இருந்த யதார்த்தங்கள்.

ஆனால் இந்தியப் படை வந்த உடனயே தமிழ் பகுதிகளில் தமிழர்களோ “இந்தியாவே வெளியேறு” என்று யார் சூத்திரதாரிகளோ அவர்களுக்காகக் கோஷங்கள் போட்டோம்.

இவற்றைச் சமாளிக்க, நானறிந்த வரையில், இந்தியாவின் அதிகாரிகள், முக்கியமாக றோவிலிருந்து வந்தவர்கள், வடபகுதியின் புத்திஜீவிகளையும், சிவில் அமைப்புகளையும், மேலும் அப்பொழுது இயங்கிய பிரஜைகள் குழுவையும் சந்தித்து, ஒப்பந்தத்தின் எழுதாத சரத்துக்களாக – ஆனால் புரிந்து கொள்ளப்பட்டவையாக – என்ன நடைமுறைப்படுத்தப்படும் என விளக்கினர்.

அவற்றை ஓரளவு கிரகித்து கொண்ட சிவில் அமைப்புக்களும் பிரஜைகள் குழுவும் யுத்த நிறுத்தத்துக்கும் சமாதானத்துக்கும் பாடுபட்டன. ஆனால் தாங்கள்தான் ஏகோபித்த தலைமையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற பிடிவாதங்களாலும் ஆயுதங்களிலிருந்த நம்பிக்கைகளாலும் மக்களின் அறிவுரைகள் கேட்கப்பட்டாலும், அவை பற்றி அக்கறை கொள்ளாமல் எம் வழி தனி வழியாக அமைந்தது – பிரேமதாஸா அழைக்கும் வரை.

(வளரும்....)

இந்தவாரம் இவர்

# ஸாரா ஹேல் உலகின் முதல் பெண் பத்திரிகையாளர்

-ப்ரியமதா பயஸ்

கி.பி. 1804 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் மாத பத்திரிகைகளின் வரவு நூறைத்தாண்டிவிட்டது. புற்றீசல்கள் போல விதவிதமான தலைப்புகளில் வார, மாத பத்திரிகைகள் தோன்றிய வண்ணமிருந் தன. ஆண்களுக்கும் பெண்களுக்கும் குழந்தைக ளுக்கும் என்று பல பத்திரிகைகள். தனித்துவம் பெற்றுத் திகழ்ந்தன. பரபரப்பாகத் தோன்றிய பல பத்திரிகைகள் தோன்றிய சில மாதங்களிலேயே வீழ்ச்சியுமடைந்தன. நின்றும் போயின.

அநேகமாக ஆரம்ப காலத்து அமெரிக்கப் பத்திரி கைகள் எல்லாம் சந்தாதாரர்களுக்கே அனுப்பப்பட்டன. இப்போது போல ஊருக்கு ஊர் விநியோக ஏஜெண்டு கள் கிடையா. அக்காலத்தில் பத்திரிகைத் தொழிலை லாபகரமான தொழிலாகக் கருதவில்லை.

அமெரிக்க மாத இதழ்களில் உலகில் கீர்த்தியும் மேன்மையும் மிக்க பல ஆசிரியர்கள் இருந்திருக்கி றார்கள். அவர்களுக்கு எந்த முன்னோடியும் கிடை யாது. ஆனால், அவர்களே இன்று உலகிற்கு முன் னோடியாக இருக்கிறார்கள். அவர்களில் குறிப்பிடத் தக்கவர் ஸாரா ஜோசப் ஹேல் என்கிற பெண்மணி. கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியவர்.

40ஆவது வயதில் ஒரு பத்திரிகை ஆசிரியராக வெளிப்பட்டவர் இவர்.

காசநோய் ஏற்பட்டு சாகக் கிடந்தார். இவர் கணவர் ஹேல் தனது சொத்து சுகம் அத்தனையும் விற்று திராட்சைப் பழங்களாகவே வாங்கிக் கொடுத்து அவரது உயிரை மீட்டார்.

ஆனால், கணவர் ஹேல் அதே காச நோய்க்குட் பட்டும் பலியாகிவிட்டார். தான் பெற்ற ஐந்து குழந் தைகளைக் காக்க அவர் பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பித்தார். அதில் தமது திறமை முழுவதையும் வெளிப்படுத்தினார்.

கி.பி. 1828ஆம் ஆண்டில் சின்னஞ்சிறு பெண்கள் இதழுக்கு ஆசிரியரானார். அமெரிக்க ஆண்களுடன் அவர்களுடைய மனைவிகள் சார்பாக போர் தொடுக் கிற இதழாகவே அது எடுத்த எடுப்பில் தோன்றியதாக உலகிற்குச் சொல்லிவிட்டது.

இதழுக்கு இதழ் அவர் அமெரிக்க பெண்களின் கல்வி, படிப்பு, தொழில், சொந்தமாகப் பணம் வைத்துக் கொள்ள வேண்டியதன் அவசியம் எல்லாவற்றையும் வற்புறுத்தி எழுத ஆரம்பித்தார். ஒவ்வொரு பெண் ணும் ஏதாவது ஒரு சிறு தொழிலை ஓய்வு நேரத்தில் செய்ய வேண்டும். அதைவிற்றுக் காசாக்கித் தனது இடுப்பில் முடிந்து கொள்ள வேண்டும் என்று அறிவு றுத்தினார்.

மேலும் அவர், பெண்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதிப் பதை ஆண்கள் பிடுங்கிக் கொள்ளக் கூடாது என்று பெரிய கிளர்ச்சியைச் செய்தார். வீட்டு வேலைகளை யெல்லாம் ஆண்களும் பகிர்ந்து கொண்டு செய்ய வேண்டும். நீங்கள் மட்டும் என்ன உசத்தி என்று அமெரிக்க ஆண்களைக் கண்டித்தார்.

பெண்கள் சமையலறையிலேயே கிடக்கின்றமை அவர்களுக்குப் பெரிதும் ஆரோக்கியக் கேடாக இருக் கிறது என்று சொல்லி இனிமேல் வசதியாகக் கட்டு வதற்காக வீடுகளின் மொடலைப் போட்டுக் காட்டி னார். அப்படி வீடு கட்டிக் கொடுக்கும்படி கணவன் மார்களை வற்புறுத்தினார். தானே கட்டிக் கொடுக்க வும் முன் வந்தார்.

1825இல் ஜெனரல் ஸாபெய் உருவாக்கிய பங்கர் ஹில்' என்பது. அச்சமயம் அமெரிக்காவில் ஒரு கீர்த்தி மிக்க நினைவு சின்னம், அரைகுறையாக நின்றது. ஸாரா ஹேல் அதை ஒரு சவாலாக ஏற்று தன் பத்தி ரிகையில் கட்டுரையாக வடித்தார்.

அமெரிக்காவில் பெண்களிடம் ஏதாவது ஒரு



பொருளை வித்தியாசமாகச் செய்து தரச் சொல்லி வேண்டுகோள் விடுத்தார். ஏராளமானோர் விதம்வித மாகப் பல பொருள்களைத் தயாரித்து அனுப்பி வைத் தார்கள். அவற்றைக் கண்காட்சியாக வைத்து விற்று, காசாக்கி, பெரிய நிதியாக்கி, அதைக் கொண்டு அந்த நினைவுச் சின்னத்தையே கட்டி முடித்தார்.

அவர் பத்திரிகையை ஏராளமானோர் விரும்பிப் படித்தார்கள். அமெரிக்கப் பெண்களுக்கு அவர் அரு மந்த தோழியாக விளங்கினார். அவர்களுக்கு வேண் டிய ஆலோசனைகளை வாரி வழங்கினார். அவர்க ளுக்காக வாதாடி ஒரு பல்கலைக்கழகமே திறக்கச் செய்தார்.

அக்காலத்தில் ஆண்களுக்கு மட்டுமே வியாபார நிலையங்களில் வேலை தரப்பட்டு வந்தது. பெண்கள் என்ன மட்டமா? உங்களை விட அவர்கள் கெட்டிக்கா ரர்கள். சுறுசுறுப்பாக இயங்கக் கூடியவர்கள். எந்தப் பொருளையும் அவர்களால் உங்களை விட சிறப்பாக விற்பனை செய்ய முடியும் என்று எடுத்துக் கூறி டிபார்ட்மெண்ட் ஸ்டோர்களில் பெண்களை வேலைக்கு வைத்துக் கொள்ளுமாறு சிபாரிசு செய்தார் ஸாரா ஹேல்.

அவர் சொன்னபடியே வியாபார நிலையங்களில் பெண்களை வேலைக்கு அமர்த்தினார்கள். அங்கெல் லாம் வியாபாரம் மேலோங்கி விளங்கியதைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

ஒரு கட்டத்தில் சேவை மனப்பான்மையும் திற மையும் உள்ள பெண்களை டாக்டருக்குப் படிக்கச் சொன்னார். அதை ஆண்கள் கடுமையாக எதிர்த் தார்கள்.

ஏன் எதிர்க்கிறீர்கள்?: உங்களால் பெண்களைச் சகித்துக் கொள்ள முடியாது என்றால் மருத்துவத் துறையைவிட்டு வெளியேறுங்கள். மருத்துவ நிபு ணர்களாகவும் தாதியர்களாகவும் பணிமேற்கொள்ளும் பெண்கள் உங்களைவிட சிறப்பாகப் பார்த்துக் கொள் வார்கள் என்று தன் பத்திரிகையில் காரசாரமாக எழுதினார்.

ஏராளமான பெண் மருத்துவர்கள் உருவானார் கள். அமெரிக்கப் பத்திரிகை சரித்திரத்தில் கட்டுரை எழுதும் ஆசிரியர்களுக்கு உரிய சன்மானம் அளிக்கத் தொடங்கிய பத்திரிகையாளர்களில், ஸாரா ஹேல்தான் முதன்மையானவர்.

லாங் பெல்லோ, ஹர்ல்பஸ், ஒயிட்டியர், ஹவா தான், மோர்கன் போன்றவர்களின் புகழ் பெற்ற இலக் கியப் படைப்புகளை எல்லாம் அவர் வெளியிட்டிருக் கிறார். எட்கர் ஆலன் போவின் கட்டுரைகளைப் பல ஆண்டுகள் தொடர்ந்து வெளியிட்டார்.

ஸாரா ஹேல் இருபத்திநான்கு நாவல்கள் எழுதி யிருக்கிறார். அவற்றில் குறிப்பிடத்தக்கது ஹாரி', விதவையின் மகன்', மூன்று மணி' அல்லது காத லின் பிரார்த்தனை' ஆகியவை புகழ்பெற்றவை. அவருடைய மிகவும் பிரபலமான புத்தகம் உமன்ஸ் ரெக்கார்ட்' அல்லது உலகத் தொடக்கத்திலிருந்து 1854 ஆம் ஆண்டு வரை பிரபலமான பெண்களின் வாழ்க்கை வரலாறு' என்பதாகும்.

இந்தப் புத்தகத்தில் இரண்டாயிரம் முக்கிய பெண் களின் பெயர்களும் அவர்களுடைய அரிய பணிக ளையும் தொகுத்து வழங்கியிருக்கிறார்.

பெண்களின் மதிப்பை உயர்த்த ஸாரா ஹேல் மேற்கொண்ட முயற்சிகளில் இதுவும் ஒன்று.

கூடீ என்ற செல்வந்தர், கூடீஸ்', லேடீஸ் புக்' என்ற பெண்கள் இதழை நடத்தி வந்தார். ஸாரா ஹேலின் திறமையைக் கண்டறிந்த அவர் தம் பத்திரிகையில் ஆசிரியர் பொறுப்பேற்றுக் கொண்டு தொடர்ந்து நடத்துமாறு கேட்டுக் கொண்டார். வீட்டிலிருந்தேதான் நான் பத்திரிகையை எடிட் செய்வேன். என்ற அவரது நிபந்தனையை ஏற்றுக் கொண்ட கூடீ தன் பெண்கள் இதழில் ஆசிரியராகப் பணிக்கமர்த்தினர்.

ஸாரா ஹேல் தமது கடுமையான உழைப்பால் அப்பத்திரிகையின் தரத்தை மேலும் உயர்த்தி நிகரற் றதாகவே செய்துவிட்டார். பத்திரிகைக்கு விளம்பரங் கள் நிறையக் கிடைத்தன. அதிலே அவர் எந்த ஒரு பொருளையும் நல்லது என்று எழுதினால்தான் பெண்கள் அதை வாங்குவார்கள் என்கிற அளவுக்கு அது அமெரிக்கப் பெண்களிடம் செல்வாக்குப் பெற்றது.

கி.பி. 1879ஆம் ஆண்டு வரை – அதாவது அவரது 90ஆவது வயது வரை வாழ்ந்தார். இரண்டு தலை முறை பெண்களுக்கு வழிகாட்டியாக விளங்கினார்.

என் பணி முடிந்தது. எனக்கு அழைப்பு வந்துவிட் டது. இதுவரை நான் சொன்னதை எல்லாம் மறந்து விடாதீர்கள். போய் வருகிறேன். என்று கடைசியாகத் தன் பத்திரிகையில் எழுதித்தன் லட்சக்கணக்கான வாசக சகோதரிகளிடமிருந்து பிரியா விடை பெற்றுக் கொண்டார் ஸாராஹேல்.

அமெரிக்கக் குழந்தைகளுக்காக அவர் எழுதிய கவிதைகள் சாகாவரம் பெற்றவை. உலகப் புகழ் பெற்றவை.

உங்களுக்கு நினைவிருக்கிறதா ஸாராஹேல் இயற்றிய ஒரு பாடலை நீங்களும் படித்திருப்பீர்கள். உங்கள் பெற்றோரும் படித்திருப்பார்கள். உங்கள் பிள் ளைகளும் படித்திருப்பார்கள். ஏன்? உங்கள் பேரன் பேத்திகளும் இன்று படித்துக் கொண்டிருப்பார்கள்.

என்ன பாடல் அது என்று யோசிக்கிறீர்களா? அதுதான் உலகப் பிரசித்தி பெற்ற அழகிய குழந்தைப் பாடல்மேரி ஹாட் ஏ லிட்டில் லாம்ப்'. ஆம், அதை எழுதிய பெண்மணிதான் இந்த ஸாரா ஹேல் உலகி ன் முதல் பெண் பத்திரிகையாளர்.

# இறுக்கமான கட்டுப்பாடுகளை மீண்டும் விதிக்கவேண்டி வரும்

## எச்சரிக்கின்றார் இராணுவத் தளபதி

இலங்கையில் நாளாந்தம் பதிவாகும் கொவிட் தொற்றுக்கு இலக்கான நோயாளர் களின் எண்ணிக்கை ஒரு மாதத்தின் பின்னர் மீண்டும் அதிகரித்துள்ளதாக கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும், இரா ணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மக்கள் சுகாதார விதி முறைகளைக் கடைப்பிடித்து மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். இல்லையேல் மீண்டும் இறுக்கமான கட்டுப்பாடுகளை நாம் விதிக்க வேண்டி வரும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில் –

இலங்கையில் நாளாந்த கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரு மாதத்தின் பின்னர் 1,900 ஐத் தாண்டியுள் ளது. இதேவேளை, கடந்த வியாழக்கிழமை 2,300 இற்கும் மேற்பட்ட கொவிட் தொற்றா ளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் புத்தாண்டு கொவிட் கொத்தணியுடன் தொடர்புடைய வர்கள். சில கட்டுப்பாடுகளில் தளர்வுகள் வந்தமையால் தொற்றாளர்களின் எண் ணிக்கையும் அதிகரிக்கின்றது.

எனவே, மக்கள் சுகாதார விதிமுறை களைக் கடைப்பிடித்து மிகவும் அவதானத் துடன் செயற்பட வேண்டும்.

இல்லையேல் மீண்டும் இறுக்கமான கட்டுப்பாடுகளை நாம் விதிக்க வேண்டி வரும்.



கொவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப் படுத்துவதற்காகப் பொதுமக்கள் தடுப்பூசி யைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பாட்டும் நானே? பாவமும் நானே!

**‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.**



**1. கேள்வி: -** மகாராஜா நிறுவன அதிபர் இராஜ மகேந்திரன் அவர்களின் மறைவு பற்றி?

**பதில் : -** உலகைத் தன் உறவாய் நினைத்த ஒரு பெருமனிதனை நாம் இழந்து நிற்கிறோம். தன்னைப் பொருளாதாரத்தால் மட்டுமன்றி இன்னும் பல வழிகளாலும், உயரச் செய்த தன் தலைமகனை இழந்து இலங்கைத்தாய் கண்ணீர் சிந்துகிறாள். இலங்கைத் தமிழர்கள் இத்தேசத்தை வளப்படுத்துவதிலும் பங்காற்றுவார்கள் என்பதற்கு, சாட்சி பகன்று நின்ற ஒரு மாமேரு சரிந்துவிட்டது. கட்சிகளின் செல்வாக்கைத் தாண்டி, நடுநிலை தவறாது, அனைத்து இன, மத மக்களின் நலனுக்காகவும் துணிந்து குரல் கொடுத்து வந்த, ஒரு மகோன்னதனின் மறைவால் இலங்கை மக்கள் ஒருசேரக் கண்ணீர் வடிக்கின்றனர். ஊடக பலத்தைத் தன் நலத்திற்காக அன்றி, தேசமக்களின் நலத்திற்காகத் துணிந்து முன்னெடுத்த, அவ் உயர் தலைவனின் மறைவு, இலங்கை மக்களின் எதிர் காலத்தைக் கேள்விக்குறியாக்கியிருக்கிறது. எங்கெல்லாம் வறியவர்கள் கண்ணீர் சிந்துகிறார்களோ அங்கெல்லாம் அவர்தம் கண்ணீரைத் துடைக்க, அழைக்காமலே நீண்ட கரங்கள் ஓய்ந்துவிட்டன. பொருளாதாரத்தால் விண்தொட்டபின்னும் மனிதப் பண்பால் மண்தொட்டு நின்ற, அப் பண்பாளனின் அன்பையும் நேசத்தையும் மறக்க முடியாமல் அனைவரும் வாடுகின்றனர். தேசநலன் பற்றிய அச்சம் பலரதும் மனதில் படரும் வேளையில் அதைக் காப்பதற்காய்த் துணிந்து குரல் கொடுத்துவந்த ஒரு வீரியனின் குரல் அடங்கி


இராஜ மகேந்திரன்

விட்டது. தினமும் இலங்கை பூராகவும் அவருக்காக நடைபெறும் அஞ்சலிக் கூட்டங்கள் அவரின் அகவிரிவைக் காட்டுகின்றன. அவர் இழப்பு தேசத்தின் இழப்பா? தமிழர்களின் இழப்பா? மானுடத்தின் இழப்பா? என்று சரியாய்ச் சொல்லமுடியவில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ தமிழர்களைத் தலைநிமிர்த்திய தமிழன்.**

**2. கேள்வி: -** இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வீர்களோ தெரியவில்லை. ஆனாலும் இது கல்லூரிகளிலே இப்போது ஓர் பிரச்சனையாய்ப் பேசப்படுகிறது. முடிந்தால் இப்பிரச்சினை பற்றி உங்கள் கருத்தறிய விரும்புகிறோம். இராமாயண அயோத்தியா காண்ட குகப்படலத்தில் வரும் ஒரு பாடல் தரம் 11 பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அப்பாடலின் கருத்தில் பலரும் குழம்புகிறார்கள். பாடலைக் கீழே தருகிறேன்.

**சுழித்து நீர் வரு துறை ஆற்றை, சூழ் படை**
**கழித்து நீங்கியது என, கள்ள ஆசையை**
**அழித்து, வேறு அவனி பண்டு ஆண்ட வேந்தரை**
**இழித்து, மேல் ஏறினான் தானும் ஏறினான்.**

இப்பாடலில் ‘கள்ள ஆசையை அழித்து,’ என வரும் தொடரை பரதனோடு பொருத்தி, அவனுக்கு அயோத்தியை ஆளும் ஆசை இருந்தது என்றும், அதனையே கம்பர் மேற் தொடரால் குறிப்பிடுகிறார் என்றும் சில ஆசிரியர்கள் கற்பித்து வருகின்றனர். இது பற்றி உங்கள் கருத்தை அறிய விரும்புகிறோம்.

**பதில் : -** நான் விளையாடக்கூடிய ‘கிறவுண்டில்’ கேள்வி கேட்டிருக்கிறீர்கள். இதற்குப் பதில் சொல்லாமல் வேறு எந்தக் கேள்விக்குப் பதில் சொல்லப்போகிறேன்? விடயத்திற்கு வரலாம்.

‘எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான். படித்தவன் பாட்டைக் கெடுத்தான்’ என்று சொல்வது இதைத்தான். காவியம் முழுவதையும் படிக்காமல், ‘சிலபஸ்ஸ்’க்கு’ போட்ட பகுதியை மட்டும் படித்துவிட்டு விளக்கம் சொல்லப் புறப்படுவதால் வரும் நஷ்டம் இதுதான். முதலில் பாட்டின் பொருளைப் பார்க்கவேண்டும்.

குகனைச் சந்தித்து நட்புப் பூண்ட பிறகு, குகனின் சேனையின் உதவியுடன் பரதனுடன் வந்தவர்கள் கங்கையைக் கடக்கிறார்கள். எல்லோரையும் அனுப்பிய பின்பு பரதனும் படகேறுகிறான். மேற்பாடல் அந்தச் செய்தியைத்தான் சொல்கிறது. சுழித்து ஓடுகிற நீரைக் கொண்ட கங்கை ஆற்றினை பரதனுடன் வந்த படைகள் கடந்து நீங்கின. (சுழித்து நீர் வரு துறை ஆற்றை, சூழ் படை கழித்து நீங்கியது.) இதுவரைக்கும் உங்கள் ஆசிரியர்களுக்குப் பிரச்சினை இராது என்று நினைக்கிறேன்.

இனி வருகின்ற வரிகளை பின்வருமாறு, கொண்டு கூட்டித்தான் பொருள் கொள்ளவேண்டும். பண்டு அவனி ஆண்ட வேந்தரின் கள்ள ஆசையை அழித்து, இழித்து மேல் ஏறினான்தானும் ஏறினான் இதுதான் இப்பாடலுக்குப் பொருள் கொள்ளவேண்டிய முறை.

இதன் பொருள், இதுகால்வரைக்கும் பூமியை ஆண்ட மன்னர்களின், மனத்திருக்கும் எப்படியேனும் அரசாளவேண்டும் எனும் கள்ளத்தனமான ஆசை தன்னிடம் சேராமல் முற்றாய் அழித்து, அத்தகைய ஆசை உள்ளவர்களை இழிவு செய்து, மேல் எழுந்தவனான பரதனும் படகில் இறுதியாகச் சென்று ஏறினான் என்பதேயாம்.

சிலர் கள்ள ஆசை எனும் தொடரைப் பரதன் மேல் ஏற்றக்கூடாதா எனக் கேட்பர். நல்லவனைக் கெட்டவனாக்குவதில் எம்மவர்க்கு இருக்கும் ஆசையை என்ன சொல்ல? இதுவும் அப்படியான ஒன்றுதான். அவர்கள் நினைக்கின்ற வகையில் கள்ள ஆசை என்பது பரதனின் ஆசையைச் சுட்டுகிறதென்றால், அப்பாடலில் வரும் வேந்தரை இழித்து என்ற தொடரும், மேல் ஏறினான் எனும் தொடரும் ஏன் இடப்பட்டிருக்கின்றன என்று அவர்கள் சொல்லவேண்டும். வேந்தரை இழித்து என்ற தொடருக்கு மற்றைய வேந்தர்கள் இழிவடையும் படியாக என்பதே பொருள். மேலேறினான் எனும் தொடருக்கு மற்றவர்களைத் தாழ்த்தி தான் உயர்ந்தான் என்பதே பொருள். இத்தொடர்களைப் பார்த்த பின்பும் கள்ள ஆசை எனும் விடயத்தைப் பரதனோடு பொருத்துவது எவ்வளவு பெரிய தவறு!

இன்னொன்றும் சொல்கிறேன். கள்ள ஆசை பரதனதுதான் என்று சொல்லவேண்டுமானால், காவியத்தின் எங்கேனும் அதற்கான சான்று இருக்கவேண்டும். பரதனைச் சந்திக்கும் முன்பாக தவறுதலாக அவனை ஐயுற்ற குகனும், கோசலையும் பரதனது தூய்மை கண்டு ஆயிரம் இராமர் உனக்கு நிகராவரோ? என்றும் கோடி இராமர் உனக்கு நிகராவரோ? என்றும் பேசுகிற இடங்களைப் படித்திருந்தால், இத்தகைய சந்தேகம் எழுந்திராது. ஆட்சியை உதறியது மட்டுமன்றி, இராமன் காட்டிலிருந்த பதினான்கு ஆண்டுகளும் தவ வாழ்க்கை வாழ்ந்த பரதனுக்கு ஆளவேண்டும் என்ற கள்ள ஆசை இருந்தது என்று சொன்னால் அவர்கள் நரகத்திற்குத்தான் போவார்கள். ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சரியாகக் கற்பிக்காவிட்டாலும் பரவாயில்லை. பிழையாகக் கற்பிக்கக் கூடாது. தவறினால் அடுத்தபிறப்பில் அவர்கள் எதுவாய்ப் பிறப்பார்கள் என்று நான் சொல்லமாட்டேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ வள்.. வள்.. வள்.. அதுதானே**

**3. கேள்வி: -** இலங்கையின் புகழை நிலை நிறுத்திய மகாராஜா நிறுவன அதிபரின் மறைவுக்கு நம் ஜனாதிபதி அஞ்சலிகூடச் செலுத்தவில்லையே?

**பதில் :-** தனது பகைவனான எல்லாளனைக் கொன்ற பின்பு அவனுக்கு நடுகல் நட்டு மக்களை அஞ்சலி செலுத்துமாறு செய்தானாம் துட்டகைமுனு. அதுதான் சிங்கள நாகரீகம் என்று பெருமை பேசுகிறார்கள். பொறுங்கள்! பொறுங்கள்! கேள்வியை மாறிப் படித்துவிட்டு விடை எழுதிவிட்டேன் போல. நீங்கள் என்ன கேட்டீர்கள்?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ நயத்தக்க நாகரீகம் வேண்டுபவர். ??????**

**4. கேள்வி:-** கடலட்டை விவகாரத்தில் ஆரம்பத்தில் வடக்கு மக்களோடு கடுமையாக முரண்பட்ட டக்ளஸ் இப்போது சற்று இறங்கி வருமாப் போல் தெரிகிறதே?

**பதில் : -** ஒன்று தானாய்த் தசை ஆடியிருக்கவேண்டும். அல்லது யாரோ ஆட்டிவித்திருக்க வேண்டும். எதுவானாலும் அவரது தலைமையை இப்போதைய செயல்கள் நிச்சயம் பெருமைப்படுத்தும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘ஆட்டுவித்தால் யாரொருவன் ஆடாதாரே கண்ணா’ ஹி..ஹி..**

**5. கேள்வி: -** இந்தியாவிற்கு, நீர் மூழ்கிக் கப்பல்களைத் தாக்கும் நவீன விமானங்களை அமெரிக்கா அளித்திருப்பது பற்றியும், இந்தியாவிற்கு அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளரின் வருகை பற்றியும், அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா, இந்தியா போன்ற நாடுகளின் கூட்டு ஆலோசனை பற்றியும் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் : -**இலங்கையைச் சூழத்தொடங்கியிருக்கும் ‘ட்றகனை’ கழுகு கவ்வப் பார்ப்பதன் அடையாளங்கள் தான் இவை போல.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ எவர் வென்றாலும் இலங்கை நஷ்டப்படப்போவது உறுதி.**

**6. கேள்வி:** இராமேஸ்வரத்திற்கு அருகில் இந்தியா, தனது அதி நவீன நீர்மூழ்கிக் கப்பலை நிறுத்தியிருக்கிறதாமே! எதற்காகவாக்கும்?

**பதில் : -** யாருக்காவது பிதிர்க்கடன் செய்ய வந்திருக்குமோ? என்னவோ?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ இந்தக் குசும்புதானே வேணாங்கிறது.**

**7. கேள்வி: -** கல்கியின் எழுத்துக்கள் பிடிக்குமா? நவீன விமர்சகர்கள் சிலர் அதனைக் கிண்டல் செய்கிறார்களே.


எழுத்தாளர் கல்கி

**பதில் : -** எழுத்துக்களா அவை? நவீன காலத்துக் காவியங்கள் அல்லவா? அது எவர்க்கேனும் பிடிக்காமல் போகுமா? வெளி நாட்டார் தந்த விமர்சனச் செருப்புக்கு ஏற்ப, எங்கள் காவியங்களின் கால்களை வெட்ட நினைக்கும் சுயமில்லாத விமர்சகர்களைத் தூக்கிக் குப்பையில் போடுங்கள். கழுதைகளுக்கு எங்கே கற்பூர வாசனை தெரியப் போகிறது?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ கழுதைகளிடம் உதை வாங்கப் போகிறார் வாரிதியார்.**

காலைக்கதிர்
Kalaikkathir

### ஆயுள் தண்டனையை மேன்முறையீட்டு நீதிமன்றம் இரத்துச் செய்ததையடுத்து

# வவுனியா மேல் நீதிமன்றத்தால் கண்ணதாசன் நேற்று விடுதலை




(ந.லோகதயாளன்)

**ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் போராளியும் யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளருமான க.கண்ணதாசனுக்கு வழங்கிய ஆயுள் தண்டனையை மேன்முறையீட்டு நீதிமன்றம் இரத்துச் செய்ததையடுத்து அவர் நேற்று வவுனியா மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.**

**தமிழீழ இசைக் கல்லூரியின் பொறுப்பாளராக இருந்த கண்ணதாசன், போரின் முடிவில் படையினரால் கைது செய்யப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார்.**

யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற மிருதங்க கலைஞர்களில் ஒருவரான கண்ணதாசன், யாழ்.பல்கலைக்கழகத்தில் இசைத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றி வந்தார்.

கிளிநொச்சி மாவட்டம், உருத்திரபுரம் பகுதியில் 2007 ஜனவரி மாதவாக்கில், மஞ்சுளா விஜயபாலன் எனும் சிறுமியைக் கட்டாயமாக விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்த்தார் என்று அவருடைய தாயார், கண்ணதாசன் மீது 2014ஆம் ஆண்டு மார்ச்சில் வழக்குத் தொடுத்தார். அடுத்த ஆண்டே பயங்கரவாத விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட கண்ணதாசன், பல மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தார்.

அதனடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காகப் பலவந்தமாக ஆள்களைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விரிவுரையாளர் கண்ணதாசனுக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கில் அவர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு 2017ஆம் ஆண்டு அவருக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தால் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தண்டனையை எதிர்த்து க.கண்ணதாசன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது.

அந்த மேன்முறையீட்டு மனு மீது இரண்டு ஆண்டுகளாக விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் 2020ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் திகதி அவரது ஆயுள் தண்டனையை ரத்துச் செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், குற்றப்பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுக்க அனுமதியளித்திருந்தது.

இந்தநிலையில், அவருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுப்பதற்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் மீளவும் ஒப்படைக்கப்பட்டது.

இந்த வழக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்டது.

வழக்குத் தொடுநரான சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி, குற்றப்பத்திரிகையில் திருத்தம் செய்ய விண்ணப்பம் செய்தார்.

கண்ணதாசன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கே.சயந்தன் ஆகியோர் அதை ஆட்சேபித்து வாதிட்டனர்.

வழக்குத் தொடுநர் தரப்பு விண்ணப்பத்தை நிராகரித்த வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன், எதிரியை விடுவித்து விடுதலை செய்து கட்டளையிட்டார்.

## ஹிஷாலினிக்கு நீதி கோரி யாழில் தனிநபர் போராட்டம்

(இ.கலையமுதன்)

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வீட்டில் உயிரிழந்த சிறுமி ஹிஷாலினிக்கு நீதி கோரி யாழ்.மத்திய பஸ் நிலையத்துக்கு முன்னால் மலையகத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

ரிஷாத்தின் வீட்டில் ஏற்கனவே மூன்றுக்கும் மேற்பட்ட பெண்கள் துன்புறுத்தல்களை எதிர் கொண்டுள்ளனர் என்று பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எனவே, இந்த அரசானது பெண்களைப் பாதுகாக்கும் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். ஜனாதிபதி மாணிக்கக்கல்



பற்றி கதைப்பதை நிறுத்திவிட்டு மகளிரைப் பாதுகாப்பதற் கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட நபர் தெரிவித்தார்.

## எதிரணியினரின் அழைப்பை அடியோடு நிராகரித்த மங்கள



பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொள்வது குறித்து மறுபரிசீலனை செய்யுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர நிராகரித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியும் ஶ்ரீலங்கா பொது ஜன முன்னணியும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொள்வதற்கு மங்கள சமரவீர ஆர்வம் கொண்டிருப்பாரேயானால், அது குறித்து கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸவுடன் கலந்துரையாடத் தயாராக இருப்பதாக அக்கட்சியின் செயற்குழு உறுப்பினர் ரெஹான் ஜயவிக்ரம தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் மங்கள சமரவீர அவரது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு மறுப்பு வெளியிட்டிருக்கின்றார்.

## வீதியில் சென்ற இளைஞரை கடத்தித் தாக்கிய பொலிஸார்

(இ.கலையமுதன்)

வீதியால் சென்ற தன்னை கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் வாகனத்தில் கடத்திச் சென்று, கைத்துப்பாக்கியால் தாக்கி, வீதியில் வீசிவிட்டுச் சென்றனர் என்று இளைஞர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

தான் வீதியால் சென்று கொண் டிருந்த போது மதுபோதையில் ஹயஸ் ரக வாகனத்தில் வந்த கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கடத்திச் சென்று வாகனத்தினுள் வைத்து கைத்துப்பாக்கியால் தாக்கி சில கிலோ மீற்றர் தூரம் கொண்டு சென்று வீதியில் வீசி விட்டுச் சென்றனர் என்று பாதிக்கப்பட்ட இளைஞர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த ஒரு வார கால பகுதிக்குள் கோப்பாய் பொலிஸாரால் மனித உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் நான்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் விளக்கங்கள் கோரப்பட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ள போதிலும் , கோப்பாய் பொலிஸாரின் மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

## டயகம சிறுமி ஹிஷாலினியின் சடலம் பலத்த பாதுகாப்புடன் பேராதனைக்கு



நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய வேளை தீக்காயங்களுக்குள்ளாகி உயிரிழந்த சிறுமி ஹிஷாலினியின் சடலம் டயகம தோட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்டது.

நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விசேட வைத்திய குழுவினர் முன்னிலையில் நேற்று நண்பகல் 12 மணியளவில் சடலம் தோண்டி எடுக்கப் பட்டது.

குறித்த சடலம் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் கண்டி பேராதனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

# அரச ஊழியர்கள் அனைவருக்கும் அதிகரிக்கப்படுகின்றது சம்பளம்?

கொழும்பு, ஜூலை 31

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க வரவு - செலவுத் திட்டத்தில் அவதானம் செலுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி கேட்டாபய ராஜபக்ஷ தலைமையில் சூம் தொழில்நுட்பத்தில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர், அதிபர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை இணக்கம் வெளியிட்ட போதிலும் இது தொடர்பில் ஆசிரியர் சங்கத்துடன் விசேட கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ரமேஷ் பத்திரண, உதய கம்மன்பில, பந்துல குணவர்தன, காமினி லொக்குகே, விமல் வீரவன்ஸ ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது அரச ஊழியர்கள் அனைவருக்கும் சம்பளம் அதிகரிப்பது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சினோவாக் தடுப்பூசியை பெறத் தீர்மானமில்லை

சீனாவிடம் இருந்து சினோவாக் தடுப்பூசியைப் பெறுவது தொடர்பில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை சினோவாக் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்யவுள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் பொய்யானவை என்று மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

இதுபோன்ற எந்த முடிவும் அரசாங்கத்தால் எடுக்கப் படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

சினோவாக் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதா, எந்த விலையில் அல்லது எத்தனை டோஸ்களில் கொள்வனவு செய்வது என்பது தொடர்பாக இலங்கை இதுவரை முடிவு செய்யவில்லை என்று அவர் கூறினார்.

அவசர தேவைக்கான தடுப்பூசியாக சினோவாக்கை இலங்கை அங்கீகரித்திருந்தாலும் அது கொள்வனவு செய்யப் படும் என்று அர்த்தமல்ல என்றும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

## ஒருவாரத்தில் 15 கர்ப்பிணிகளுக்கு புங்குடுதீவில் கொரோனாத் தொற்று

யாழ்ப்பாணம் - புங்குடுதீவில் கடந்த ஒரு வார கால பகுதிக்குள் 15 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மேற்படி அனைவருக்கும் கொரோனா சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதியில் கொரோனா வைரஸ்தொற்றாளர்கள்தொடர்ந்து அடையாளம்காணப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## காற்பந்து சம்மேளனத்துக்கு கோப் குழுவினால் அழைப்பு

இலங்கை காற்பந்து சம்மேளனம், பொதுநிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழுவான கோப் குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது. எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி இலங்கை காற்பந்து சம்மேளனம் கோப் குழுவில் முன்னிலையாக வேண்டும்.

அதேநேரம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி தம்மிடம் முன்னிலையாகுமாறு, பொது கணக்குகள் குழு அழைப்பு விடுத்துள்ளது.

## போதை வியாபாரியுடன் 4 இளைஞர்கள் கைது

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காவத்தமுனை, பனிச்சையடி வீதியிலும் நாவலடியிலுமாக கொழும்பைச் சேர்ந்த போதைப்பொருள் வியாபாரியுடன் 4 இளைஞர்கள் கடந்த வியாழக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத்தகவலுக்கமைய வாழைச்சேனை பொலிஸாரோடு இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே கொழும்பைச் சேர்ந்த போதை வியாபாரியுடன் 24, 25, 28, 28 வயதுடைய நான்கு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 2 கிராம் 500 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பு நபர் கொழும்பிலிருந்து ஐஸ் போதைப்பொருள்களைக் கொண்டு வந்து இப்பிரதேசத்தில் இளைஞர்கள் ஊடாக விநியோகித்து வந்துள்ளமை முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மேற்படி நபரையும் இளைஞர்களையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளமையுடன், வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் வாழைச்சேனை பொலிஸாரும் இவர்களுடன் தொடர்புடைய நபர்களைத் தேடி வருகின்றனர்.

## 2 கோடி ரூபா பெறுமதியுடைய ஹெரோயினுடன் ஒருவர் கைது

பாதுக்கை, மீகொட பகுதியில் வைத்து ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர்களிடம் இருந்து 2 கிலோ 450 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஹெரோயின் 2 கோடி ரூபா பெறுமதியுடையது எனத் தெரிவிக்கப்படுகின்றது.


















இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.07.2021 இல் வெளியிடப்பெற்றது.